# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

5–9–71


★

உள்ளே......


தேடியது, வக்கீலை!
(அறிஞர் அண்ணா)

கட்டாயம் தேவை
கடுந் தண்டனை!
(தலையங்கம்)

துக்க தினம் ஒரு
அரசியல் ஸ்டண்டே
(கட்டுரை)

சோழமாதேவி
(தொடர் கதை)



விலை 20 காசு


## இதயத்தின் கதறல்

### கவிஞர் மணிவேந்தன்

சமுதாயம் திருந்திடவும் வேண்டும் - புதிய
சமுதாயம் மலர்ந்திடவும் வேண்டும்!

சாதியெனும் சாக்கடையில் புழுப்போல வாழ்ந்து
சமயமெனும் படுகுழியில் தடுமாறி வீழ்ந்து
மேதினியில் தீண்டாமைக் கொடுமையினால் தாழ்ந்து
மீட்சியிலா வெஞ்சிறையில் வதைபட்டுச் சாகும்...
(சமுதாயம்...)

பிறப்பினிலே உயர்வுதாழ்வு பேசுகின்ற மக்கள்
பிழைக்கவழி இல்லாமல் வாடுகின்ற கூட்டம்
இறப்பினிலும் அமைதியின்றி இமைமூடும் ஏழை
இவரையெலாம் அங்கமென இப்புவியில் கொண்ட...
(சமுதாயம்...)

கண்ணீரில் மிதக்கின்ற பாட்டாளி மக்கள்
கனிச்சாறில் நீந்துகின்ற முதலாளி வர்க்கம்
வெந்நீரில் மீன்போலத் தொழிலாளி வாட
'விதி'யென்று சொல்லியுமே வேடிக்கை பார்க்கும்...
(சமுதாயம்...)

சாத்திரத்தில் மூழ்கியுமே முக்காலம் பார்த்து
சகுனத்தில் விளையாடி எமகண்டம் கண்டு
கோத்திரத்தில் உயர்வுதாழ்வு பார்ப்பானைப் போற்றிக்
கோபுரத்தில் ஏற்றுகின்ற கொடுமையினைச் செய்யும்
(சமுதாயம்...)

வஞ்சனையும் ஏமாற்றும் வாழ்க்கையிலே சூதும்
வணிகத்தில் கலப்படமும் கையூட்டும் பொய்யும்
நெஞ்சினிலே இரக்கமிலாக் கல்மனமும் பெற்ற
நேர்மையிலாக் கயவர்களை வாழவிடும் இந்தச்
(சமுதாயம்...)

22-8-71-ம் நாள், பிரசுரிக்கப்பட்டிருக்கும் "தென்மொழியாரின் அழுக்காறு" என்ற கட்டுரையை வரவேற்றும், கண்டித்தும் நமக்குப் பல கடிதங்களும், கட்டுரைகளும் வந்துகொண்டிருக்கின்றன. பிரச்னையை மேலும் விரிவுபடுத்த விரும்பாததால் அது தொடர்பானவைகளை, இந்தக் கடிதத்துடன் முடித்துக் கொள்கிறோம். —ஆசிரியர்.

# "தென்மொழிப் பெருஞ்சித்திரனின் திருகு தாளங்கள்"

## அன்புள்ள ஆசிரியருக்கு

அன்பிற்குரிய புதுவையூராரின் "தென் மொழியின் அழுக்காறு" என்னும் கட்டுரையை நம் காஞ்சி (22-8-71) இதழில் கண்டேன். கண்டதும், அகமிக மகிழ்ந்தேன். காரணம், திறனாய்வாய் எழுதியிருப்பது நடைமுறையில் அவர்தம் செயல் முறைகளிலும் அப்படியே இருப்பதைக் கண்டதாலே தான். புதுவையூராரோ பாடலாற் சான்று பகர்ந்துள்ளார். நானே, அவரின் உண்மை உள்ளத்தினையே இம்மடல்வழி எழுதிப் புலப்படுத்த எண்ணுகின்றேன். எனவே, காஞ்சியார் அருட்கனிந்து முழுமையாய் இம்மடலினை வெளியிடுவதோடு மக்களுக்கும் அவரின் உளநிலையை உணர்த்திட உதவித் துணைபுரிவார்கள் என்றும் பெரிதும் நம்புகின்றேன்.

1971, சனவரித் திங்கள் 10, 11ஆம் நாட்களில் உ. த. க. என்னும் உலகத் தமிழ்க் கழகத்தின் இரண்டாவது மாநாடு மாநகராம் மதுரையில் நடைபெற்றது. அது போழ்து, நடைபெற்ற உ. த. க. செயற்குழுக் கூட்டத்தில் உ. த. க.வை இப்போதே அரசியல் கட்சியாக மாற்றி அறிவித்துவிடவேண்டும் என்றாராம். ஆயின், மற்றையோர் மறுத்து விட்டனர். நான் தெரியாமல் கேட்கவில்லை. தெரிந்தேதான் கேட்கின்றேன். உ. த. க.வில் 10 ஆயிரம் பேராவது உறுப்பினர்கள் உள்ளார்களா என்ன? தி. மு. க. செய்த—செய்து வருகிற அரிய தமிழ்த் தொண்டினைவிட நீர் என்ன புதிதாக அமைச்சராகி தமிழுக்குத் தொண்டு செய்துவிடுவீர்? ஓ, பெருஞ்சித்திரனே! உமக்குச் செல்வமும், பதவியும் பணமும், பவிசும் ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தானே, நீர் உ. த. க.-வை அரசியல் அமைப்பாக மாற்றவேண்டுமென்றீர்? இப்போது, புரிகிறதா தோழர்களே! பெருஞ்சித்திரன் எப்படிப்பட்ட புகழ்ப் பேய் என்று! அது மட்டுமா...

மதுரை மாநாட்டில் தோழர் பெருஞ்சித்திரன் பேசியபோது இன்னும் ஓர் ஆண்டிற்குள் பாவாணரின் "செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகர முதலி"க்கு பொருள் தண்டித் தர முடியாது போனால் உ. த. க.வை கலைத்து விடலாம் என்று பேசினார். எதனால் இப்படிப் பேசினார் தெரியுமா? செயற்குழுக் கூட்டத்தில் தாம் சொன்ன (உ. த. க. அரசியல் அமைப்பு) கருத்தினை பிறர்தாம் ஏற்றுக் கொள்ளவில்லையே என்பதற்காக தம் மனத்தில் ஏற்பட்ட மனக்குமுறலே அவ்வாறு வெளிவந்த பேச்சாக வெடித்துக் கிளம்பியதென்பதும் இப்போது புலப்படவில்லையா என்ன? அதன் பின்னர் அதே மாநாட்டில் தஞ்சை மாவட்ட உ. த. க. அமைப்பாளரான புலவர் வி. பொ. பழநிவேலனார் உ. த. க.வை கலைக்கக் கூடாது என்று பேசியிருக்கிறார்கள். இதனால் மனம் வெதும்பிய பெருஞ்சித்திரன் (மதிப்பிழந்த) ஊர் போனதும் உடனே தமது பொதுச் செயலாளர் பதவியைத் துறந்துவிட்டனர். இதற்கு என்ன காரணம் என்கிறீர்கள்?

உ. த. க.வில் உள்ள எவரும், எதையும், எப்போதும் தம்மை மீறி பேசக்கூடாது. தாம் சொல்வதையே ஒப்புக்கொள்ள வேண்டும்; தம்மைத் துதிபாடுவோரே அமைப்பிலும் இருக்க வேண்டும் என்பதே அவர் கொள்கை. இதைப் பிறர் மீறினால் அவர் எப்படி இருப்பார். பாவம்! போயே போய் விட்டார். போகட்டும் விடுங்கள். சரி தொலைகிறது என்றால், போனதோடு நின்றாரா என்றால் அதுவுமில்லை. உடனே, தமது மருமகன் இறைக்குருவனை அப்பதவிப் பொறுப்பில் அமர்த்தினார். இதற்கிடையில்...

புலவர் வி. பொ. பழநிவேலனார் "தமிழ்நாடு தன்மானப் பகுத்தறிவுப்படை" என்ற ஓர் அமைப்பினை 27—6—71 ஆம் நாள் திருச்சியில் உ. த. க. உள்ளிட்ட சில அன்பர்கள் தம் துணையுடன் தொடக்கினார். கடவுள் பற்றுள்ளரான பெருஞ்சித்திரனுக்கு இது பிடிக்கவில்லை. உடனே தமது கைப்பாவையான பாவாணரிடம் போய் வி. பொ. பழநிவேலனாரைத் தாக்கி எழுதத் தூண்டினரோ என்னவோ நமக்குத் தெரியவில்லை. அவரும் எழுதினார். அதைக்கண்ட வி. பொ. பழநிவேலனார் தமது உ. த. க. தஞ்சை மாவட்ட அமைப்பாளர் பொறுப்பினின்றும் தாம் 1-8-71 முதல் விலகிவிட்டதாய் அறிவித்து தலைவரான பாவாணருக்கு ஓர் உறைமடல் அனுப்பினார்.

அதற்கு, பெருஞ்சித்திரனின் மருமகனும் இப்போதையபொதுச் செயலாளருமான இறைக்குருவன் வி. பொ. பழநிவேலனாரை உ. த. க.விலின்று விலக்கி விட்டதாய் அவருக்கே மடல் எழுதுகிறார் 12-8-71 ஆம் நாள். எப்படியிருக்கிறது கதை? யாருக்கு யார் விலகல் மடல் எழுதப்போய் யார் இப்படி அறிவிக்கிறார் பார்த்தீர்களா? இந்த வேலைகளை எல்லாம் யார் செய்தது? எல்லாம் பெருஞ்சித்திரன் வேலைகள்தாம்! 1-8-71 ஆம் நாளுக்கு முன்பே இதனை அறிவித்திருப்பின் ஒப்புக்கொள்ள

(4-ம் பக்கம் பார்க்க.)

## அறிவிப்பு

கடந்த 22-8-71-ஆம் நாள் 'காஞ்சி' இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் 'தென்மொழியாரின் அழுக்காறு' என்ற கட்டுரையை எழுதி இருப்பவர், புலவர் அரிமதி தென்னகன் அவர்கள் அல்லர் என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

காஞ்சி
நிறுவனர்: அண்ணுதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறு மாத சந்தா ரூ. 5

மலர் 8 | 5—9—71 | இதழ் 8

# கட்டாயம் தேவை கடுந் தண்டனை ?

ஆகஸ்டுத் திங்கள் 30-ஆம் நாள் முதல் தமிழகத்திலும் மதுவிலக்கு ரத்துச் செய்யப்பட்டுவிட்டது. இந்த ரத்து நடவடிக்கை முழுமையானதல்லவென்றும், இது ஒரு ஒத்திவைப்பு நடவடிக்கையேயென்றும், அனைத்திந்திய மட்டத்தில், இத்திட்டத்தைச் செயல்படுத்த முனைந்தால், மீண்டும், தமிழகத்திலும் மதுவிலக்குத் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் தமிழக அரசு அறிவித்திருக்கிறது.

தமிழக அரசு, இந்த ஒத்திவைப்பு நடவடிக்கைக்குரிய முக்கியக் காரணங்கள்பற்றி பல தடவை, எடுத்துக்காட்டி, விளக்கமளித்திருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்திலேயே இதுவரையில் தமிழகத்தில்தான் முழுமையான அளவுக்கு மதுவிலக்குத் திட்டம் செயல்பட்டு வந்திருக்கிறது. அடுத்து குசராத் மாநிலத்தில் ஓரளவு தவிர்க்கப்பட்ட நிலையில் சிற்சில இடங்களில் மட்டும் விலக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. சென்ற கிழமை, அந்த மாநிலமும் மதுவிலக்குத் திட்டத்தை முழுமையாகக் கைவிடுவதுபற்றிச் சிந்தித்துக்கொண்டிருப்பதுபற்றிய செய்திகளும் வந்திருக்கின்றன.

துணைக்கண்டத்து மக்கள் முழுவதுமே ஒரு வகையான உரிமையை அனுபவிக்கும்போது, ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களுக்கு அந்த உரிமை மறுக்கப்படுவது என்பது எந்த வகையிலும் முறையாகாது.

அதுமட்டுமல்லாமல், தமிழகத்தைச் சுற்றியுள்ள எல்லா மாநிலங்களிலுமே மதுவிலக்குத் திட்டம் செயலிலில்லாதபோது, தமிழகத்தின் வருவாய், பிற மாநிலங்களுக்குச் சென்று விடுகிறது.

அதைவிட, மதுவிலக்குத் திட்டம் செயலிலிருந்த காலத்தில், குடிக்கும் விருப்பமுடையவர்கள் சட்டத்தையும், தண்டனையையும்கூட சட்டை செய்யாமல், குடித்துக் கொண்டுதானிருந்தார்கள். அவ்வாறு குடிக்கப் பயன்படுத்திய மதுவகைகள், சுகாதாரக் கேடுடையனவாக, உடல்நலத்துக்கு ஊறுண்டாக்குவனவாக இருந்ததால், குடித்தவர்களும், அந்தக் குடிகாரர்களுடைய குடும்பத்தினரும் கூட பாதிக்கப்பட்டு வந்தார்கள்.

எனவேதான், எல்லா வகையிலும் சிந்தித்துச் செயல்பட்டு, மதுவிலக்குத் திட்டத்தை இப்போது ரத்துச் செய்திருக்கிறது அரசு.

அதே நேரத்தில், மதுக் குடியினுல் விளையும் தீமைகளையும் அரசு உணர்ந்திருக்கிறது என்பதையும், நாம் உணரத்தக்க வகையில், மதுக் குடிக்கு எதிரான பிரசாரத்தை முடுக்க எம். ஜி. ஆர். தலைமையில் ஒரு குழுவையும் நியமித்திருக்கிறது.

கடந்த இருபத்து மூன்று ஆண்டுக் காலமாக, சட்டத்தின் சம்மதத்துடன் குடித்து, மகிழ்ந்தவர்கள் இல்லை என்றுலும், இனி குடிக்கச் செல்லுவோருக்கு சட்டத்தின் அனுமதி கிடைத்துவிட்டது என்பதனுல், குடிபோதையில் நிதானம் தவறி, காலித்தனங்களிலீடுபடுவார்களானுல், அந்த நிலையில் அவர்களை, சட்டத்தின்பிடி, பற்றிக்கொள்கிறது என்பதை புலப்படுத்திக் காட்டத்தக்க வகையில், முதல், இரண்டாம், மூன்றும் நாட்களிலேயே நாடெங்கும் பன்னூறு பேர் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள்.

குடிக்கத்தான் இப்போது அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதேயல்லாமல், குடித்துவிட்டு காலித்தனங்களிலீடுபட அனுமதிக்கப்படவில்லை என்பது இதன்மூலம் தெளிவாக்கப்பட்டுவிட்டது.

இந்தத் தெளிவு இன்னும் மிகுதிப்படுத்தப்பட வேண்டும்; குடித்துவிட்டுக் "கலாட்டா"க்களில் ஈடுபடுபவருக்கு, முன்பு, குடித்தால் கொடுக்கப்பட்ட தண்டனையைவிட, பல மடங்கு அதிகமாக தண்டனை அளிக்கப்பட வேண்டும். நீதிமன்றங்களில், இது போன்ற குற்ற நடவடிக்கைகளுக்குக் கொடுக்கப்படும் தண்டனைகளைப் பற்றி கேள்விப்படும்போதே, "கலாட்டா வாலாக்களின்" போதை, தானுகத் தெளிந்துவிட வேண்டும். அந்த அளவுக்கு உயர்ந்த பட்ச தண்டனையை நிர்ணயிப்பது, பொதுஇடங்களில் நிகழக்கூடும் என்று எதிர்பார்க்கின்ற மதுக் குற்றங்கள், கணிசமான அளவுக்குக் குறைய உதவக்கூடும்.

மதுக் குற்றங்களுக்காகக் கொடுக்கப்படுகின்ற தண்டனை, பெயரளவுக்கு என்று மட்டுமே இருக்குமானுல், நல்ல பலன் விளையாது என்று நிச்சயம் சொல்லிவிட முடியும்.

மதுக் குற்றங்களில் ஈடுபடுவோர், பெரும்பாலும் சமூகத்தின் சில தீய சக்திகளேயாகும். இந்தத் தீய சக்திகள் எப்போதுமே தீங்குண்டாக்கிக் கொண்டுதான் வந்திருக்கின்றன. இனி, அது மிகுதிப்படக்கூடும். எனவே, இப்படிப்பட்ட சமூக விரோதச் சக்திகளுக்கு உயர்ந்த பட்ச தண்டனையை அளிப்பதால் தீயசக்திகளும்கூட ஒடுக்கப்பட்டதாக ஆகும்.

இது விஷயத்தில் தமிழக அரசு, இன்னும் தீவிர சிந்தனை செய்யவேண்டும்.

மது விலக்குத் திட்ட ஒத்திவைப்பு நடவடிக்கையினை, "துக்க நாள்" என்று சொல்லி, எழுதி, தங்களுக்குத் தாங்களே துக்கம் கொண்டாடிக் கொண்டவர்கள் பற்றி விமர்சிக்க விரும்பவில்லை. அத்தகையோருக்கு நம்மைவிட, மக்கள் கொடுக்கின்ற, கொடுத்துக் கொண்டிருக்கின்ற விமர்சனங்களே போதுமானவையாகும். ஃ

61 வருட அனுபவ பிரசித்திப் பெற்ற
பரங்கிப்பேட்டை
**வைத்தியம்**
**சென்னையில்**
நேரில் சிகிச்சை பெறலாம்.
ஆலோசனைக்கு :
**ஹக்கிம்**
**M. M. முஸ்தபா, R.M.P.**
சித்த ஆயுர்வேத யூனனி முறை
ஜனநேந்திரிய சாஸ்த்திரத்தில்
அதிக அனுபவம் உள்ளவர்.




சகலவித சர்ம நோய், ஸ்கலிதம்,
ஆண்மை குறைவு, நரம்புத் தளர்ச்சி,
பெண்களின் மாதவலி,
வெள்ளை படுதல், நீரழிவு வாதம்,
ரத்தக் கொதிப்பு, மூலம், மற்றும்
பல நோய்களுக்கு கைதேர்ந்த
சிகிச்சை பெறலாம்.
நோய் விபரம் எழுதி V.P.P. மூலம்
மருந்து பெறலாம்.
**முகம்மதியா**
**வைத்தியசாலை**
[டிரஸ்ட்]
130, பிராட்வே, சென்னை-1.
போன் : 23643
H.O. பரங்கிப்பேட்டை,
தென் ஆற்காடு ஜில்லா.

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாம். விலகல் மடல் பெற்றுக் கொண்ட பின் ஒருவரை விலக்கு கிறார்களாம். என்ன, திருக்கூத்து! இதுமட்டும்தானா?

பெருஞ்சித்திரனின் வேலைகள் என்கிறீர்கள்? இல்லை, இல்லவே, இல்லை! தமது தென்மொழியில் "பாவேந்தர் பாரதிதாசனாரின் பாட்டொன்றினையே ஒருமுறை திருத்தி பேராயக் கட்சியான காங்கிரசுக்குச் சார்பாய் அதையும் பாவேந்தர் நினைவு மலர் ஒன்றிலேயே வெளியிட்டுமிருந்தனர். இதுதான் அவர் பாவேந்தருக்குச் செய்யும் நன்றிக்கடன் போலும்!" பாவம், பாவாணர் பெருஞ்சித்திரன் பொருள் தண்டித் தருவதால் அவரும் இவரின் எடுப்பார் கைப் பிள்ளையாகி "நம் கலைஞர் அவர்கள் கல்லக்குடிப் போராட்டத்தின் போது தண்டவாளத்தில் தலையை வைத்துப் படுத்த செய்தியினை சிறுபிள்ளைத்தனமென்று" அண்மையில் ஓர் தென்மொழியில் சாடி எழுதினார். இதெல்லாம் என்ன வேடிக்கை பாருங்கள்! பெரியோர் செய்ய வேண்டிய செயல்தானா? அது மட்டுமா பாவாணர் செய்தது என்றால் அதுவும் இல்லை. அதனினும் மேலாய் ஓர் பெருங் கொடுமையினையே பாவாணர் செய்துளார். அது என்ன தெரியுமா?

தமிழ் வரலாறு என்றோர் நூல் எழுதினார் பாவாணர். அதன் கிளர் நிலைப் படலத்தில் நேற்றுப் பிறந்த இந்தப் புகழ் விரும்பியும், இந்தி எதிர்ப்புப் போரில் (1965) சிறைக்குப் போய் தண்டனைக் காலம் முடியும் முன்பே பணத்தைக் கட்டிவிட்டு ஓடி வந்துவிட்டவருமான தென்மொழி பெருஞ்சித்திரன் உட்பட பிற பலரையும் தொண்டர்தம் வரிசையில் வைத்துப் பாராட்டி எழுதியிருக்கிறார். ஆனால்......

"நம் அண்ணனை, நாலரைக் கோடி மக்களின் தானைத் தலைவனை, தமிழ் மொழியின் பெருந்தொண்டனைப்பற்றி ஒரு வரி கூட அந்தத் தமிழ் வரலாற்றில் எழுதவில்லை" (இதைப் பாவாணர் தெரிந்தோ (அ) வேண்டுமென்றே செய்தாரோ அன்றிப் பெருஞ்சித்திரன் பேச்சைக் கேட்டுக்கொண்டு செய்தாரோ என்னவோ அது நமக்குத்தெரியாது)

எது எப்படிஇருந்தாலும் சரிதான்; இது எவர் செய்ததாயினும் மன்னிக்க — மறக்கப்பட வேண்டிய செயலா? பெருங் குற்றமல்லவா? இதைவிட ஒரு பெரிய கொடுமையினை அண்ணாவின் பகைவன்கூட அவருக்குச் செய்ய நினைக்கமாட்டானே! அப்படிப்பட்ட அன்பு அண்ணனை, அவரின் தமிழ்த் தொண்டினை மறைக்கலாமா? பெருஞ்சித்திரனின் தொண்டிற்கு இடமளித்த (தமிழ் வரலாற்றில்) பாவாணரின்நெஞ்சம் அண்ணாவை மறந்தது ஏன்?

அண்ணனின் பெயரை நீங்கள் மறப்பதும், மறைக்க நினைப்பதும் கறைச் சேற்றால் தாமரையின் வாசத்தையும், காரிருளால் கதிரவனின் தோற்றத்தையும் ஒழிக்க நினைக்க முற்படுவது போலாகும் என்பதை மட்டும் உணர்ந்து கொள்ளுங்கள். எச்சரிக்கை! என்னருமைக் கழகத் தோழர்களே! இவை ஒருபுறம் இருக்க, இப்போது,

"நமது கலைஞர் அவர்கட்கு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கியதை தென்மொழி எப்படி எழுதியிருக்கிறது தெரியுமா? அப்பட்டத்தினை சுடலையென்றும், கடலையென்றும் சாடியிருக்கிறார் தென்மொழியார்."

இதெல்லாம் எதைக் காட்டுகின்றது. பாவாணருக்கும், பெருஞ்சித்திரனுக்கும் நம்மீதும், நம் கழகத்தின் மீதுமுள்ள வெறுப்பினைத் தானே! தங்களுக்கு இந்தப் பதவி, பட்டம், பவிசு கிடைக்கவில்லை என்ற காழ்ப்பினைத் தானே! எனவேதான் சொல்கிறேன் அவர்களையும், அத்திருக்கூட்டத்தினையும் அவர் தம் மொழிகளையும் ஒரு பொருட்டாய்க் கருதாதீர்கள். காரி உமிழுங்கள். "இருந்தாள்; இருக்கின்றாள், என்றும் இருப்பாள்; வருந்தாள் மறத் தமிழ்த் தாய்" என்ற பாவேந்தரின் தமிழ்க் குறட்பாவின் பொருளினையும் நினையுங்கள். நல்லோரைப் போற்றுங்கள் அல்லோரை நெஞ்சினின்றும் அகற்றுங்கள் என அன்போடு வேண்டி பெருஞ்சித்திரனின் திருகுதாளத்தினை வெளியிட உதவிய வி.பொ. பழநிவேல்னார்க்கும் நன்றி கூறி அமைகின்றேன். வணக்கம்.

இன்னனம், தங்கள் அன்புள்ள,
அரும்பாவூர் - குறளன்பன்.
இடம் : திருத்துறைப்பூண்டி,
நாள் : 26—8—1971

★

## விற்பனையாளர்களுக்கு

காஞ்சி விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்,
"காஞ்சி", காஞ்சிபுரம்-3.



# தேடியது, வக்கீலை!

பலமான அடி! இரத்தம் வெள்ளம்போல வந்தது. டாக்டர்! கொஞ்சம் அவசரமாக வரவேண்டும். ஆசாமி மூர்ச்சையாகி விட்டிருக்கிறான்."

"ஏன் சார்? அடிபட்டது யாருக்கு?"

"இந்த ஆளுக்கு"

"இல்லை, நீ போடுகிற கூச்சலைப் பார்த்தால், உனக்குத்தான் அடிபட்டது, அதனாலேதான் இப்படி அலறுகிறாய் என்று நினைத்தேன். இங்கிதமே தெரிவதில்லை. வேறு எந்த இடத்திலே வேண்டுமானாலும் கூவலாம் கொக்கரிக்கலாம், டாக்டர்கள் இருக்கும் இடத்திலே நிசப்தம் இருக்கவேண்டும், தெரிகிறதா?"

"சரிதான் சார்!"

ஃ ஃ ஃ

டாக்டர், நர்சுக்குச் சாவதானமாகச் சில விஷயங்கள்—வைத்திய சம்பந்தமாகத்தான் — கூறிவிட்டு, பிறகு வந்தார். அடிப்பட்ட ஆசாமி, பலகைமீது படுத்துக்கிடந்தான். சட்டை பூராவும் இரத்தமயம். பக்கத்திலே நின்றுகொண்டிருந்தான், டாக்டரை அவசரப் படுத்தியவன்.

"என்ன இது?" என்று கேட்டார் டாக்டர். யாரோ போலீஸ் அதிகாரி பேசுவது போல இருந்தது, அவருடைய குரல், பாவனை, பார்வை.

"இவன் என் நண்பன். எக்கச்சக்கமாக ஒரு இடத்தில் அகப்பட்டுக்கொண்டான்; இப்படி அடித்துவிட்டார்கள்"

"போலீசுக்கு அல்லவா போகவேண்டும். அங்கே சென்று, அடிபட்ட விதம், அடித்த ஆளின் பெயர் இடம் இவைகளைக் கூறிவிட்டு வந்தால், பிறகு அவர்களே என்னை அழைப்பார்கள்"

"போலீசுக்குப் போவதற்கில்லை."

"ஏன்? குடித்துவிட்டு ஆடினானா; கூத்தி வீட்டில் அடிபட்டவனா? அல்லது திருடி உதைபட்டானா? போலீசுக்குத் தெரியக்கூடாதவிதத்திலே அடிபட்ட "மர்மம்" என்ன?"

"ஐயோ, நீங்கள் வீணாகவெல்லாம் சந்தேகப் படுகிறீர்களே! அப்படி ஒன்றுமில்லை. இவன், தன்னுடைய நெருங்கிய உறவினரிடம் அடிபட்டான், அதைப் போலீசுக்குத் தெரிவிப்பதற்கில்லை என்கிறேன்; வேறொன்றுமில்லை"

## அறிஞர் அண்ணா

இந்தப் பேச்சுக்கிடையிலேயே, டாக்டரின் திட்டப்படி கம்பவுண்டர், அடிபட்ட இடத்தைச் சுத்தம் செய்து, மருந்து பூசி, கட்டுக்கட்டிவிட்டான். அடிபட்டவனின் கண்கள் கொஞ்சம் திறந்தன, மீண்டும் மூடிக்கொண்டன. டாக்டர், ஒரு



முழுங்கு பாலை, அதன் வாயில் கொட்டச் சொன்னார். அந்தச் சடங்கும் முடிந்தது. பிறகு, கம்பவுண்டர் 'பில்' தயாரிக்கலானார்.

"பெயர்?"

"என் பெயரா?"

"இல்லையப்பா, இவன் பெயர்?"

"இவன் பெயர், இருதயநாதன்!"

"விலாசம்?"

"தற்போது, என் வீட்டு விலாசந்தான், 18-பக்கிரிப்பிள்ளை சந்து"

"உன் பெயர்?"

"எம்பெருமாள் பிள்ளை"

பில் தயாரிக்கப்பட்டது. பணமும் தந்துவிட்டார். பிறகு பணிவுடன் டாக்டரிடம், எம்பெருமான் பிள்ளை ஒரு விஷயம் கூறினார்.

"இன்று இரவு, இங்கேயேஇருக்க வேண்டும்; வேறே இடத்திலே சௌகரியம் இல்லை. என் வீட்டிலே ஒரு கலியாணக் கூட்டம் வந்திருக்கிறது" என்றார். டாக்டர் அதற்கான 'பில்' தயாரிக்கச் சொல்லிவிட்டு, நோயாளிக்கு வேண்டியவைகளைக் கவனித்துக் கொள்ளும்படி கம்பவுண்டருக்குக் கட்டளையிட்டுவிட்டு, கார் ஏறி, பங்களா சென்றார். ஏன் அடிபட்டான்? எப்படி அடிபட்டான்? என்பது பற்றி மேலால் தகவலும் கேட்கவில்லை; அடி பலம், அல்லது சாமான்யம், என்ற தகவலும் தரவில்லை. இது போல எத்தனையோ, 'கேசு'களைக் கண்டவர், இதிலே அவர் திடுக்கிடவோ ஆச்சரியமோ படுவாரா!

ஃ ஃ ஃ

இரவு மணி பனிரண்டுக்கு, இருதயநாதன், கொஞ்சம் பலமாகப் பிதற்றினான். எழுந்தோடிப்போய், "என்னப்பா இருதயம்!" என்று எம்பெருமான் அன்புடன் கேட்டான் தன்னுடன் பேசுவது எம்பெருமான் என்றுகூட இருதய

நாதனால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

"நான், இப்போது எங்கே இருக்கிறேன்?" என்று கேட்டான்.

"டாக்டர் வீட்டிலே அப்பா!" என்று எம்பெருமான் பதிலளித்தான்.

"டாக்டர் வீட்டிலா? வக்கீல் வீடல்லவா இது!" என்று கேட்டான் இருதயநாதன்.

படுக்கையில் புரண்டபடி, இருதயநாதன் பிதற்ற ஆரம்பித்தான். எம்பெருமான், "என்னப்பா இருதயம்! ரொம்ப வலியா?" என்று கனிவுடன் கேட்டான், "பால் வேண்டுமா? பழம் வேண்டுமா?" என்று கேட்டான், இருதயநாதனோ, கேள்விகளுக்குப் பதில் கூறவில்லை, ஒன்றுக்கொன்று சம்பந்தமற்ற வார்த்தைகளைக் கூறிக்கொண்டும், மிரட்சியுடன் பார்த்துக்கொண்டும் இருந்தான். கம்பவுண்டரோ, "காலையிலே எல்லாம் சரியாகப்போகும்" என்ற பாடத்தையே திருப்பித் திருப்பிச் சொன்சொன்னான்.

கம்பவுண்டர், அதுதான் கொஞ்சம் பயந்து, "ஏன் சார்! இந்த ஆசாமிக்குப் பைத்யமோ?" என்று கேட்டான் எம்பெருமானை. "இல்லையே, சார்! அடிபட்ட அதிர்ச்சியிலே ஒரு சமயம் மூளை..." என்று எம்பெருமான் கலக்கத்தோடு கூறினான். "இருக்கலாம்! அப்படியும் சில கேஸ் உண்டு!" என்றான் கம்பவுண்டர்.

"இதைப்போன்ற கேஸ், நீங்கள் கேள்விப்பட்டே இருக்கமாட்டீர்கள் சார், எந்த வக்கீலும் கேள்விப்பட்டிருக்கமாட்டார் சார்! இந்தக் கேசை மட்டும் நீங்கள் ஜெயித்துக் கொடுத்தால், ஜெகம்புகழும் சார், உங்களை" என்று இருதயநாதன், உரத்த குரலிலேயே கூறலானான்.

"என்ன சார் இது! வக்கீல், கேஸ், என்று உளறுகிறானே!" என்று கம்பவுண்டர் கேட்டார். எம்பெருமான் இருதயநாதனைச் சாந்தப்படுத்திப் படுக்க வைத்துவிட்டுக் கம்பவுண்டரிடம், "இவன் வக்கீல் தேடி அலைந்தான், இந்த வம்பை விலைக்கு வாங்கிக்கொண்டான். தேடி வந்தது வக்கீலை, அடைந்ததோ டாக்டர் வீட்டை" என்றான். கம்பவுண்டருக்குச் சந்தேகம் அதிகரித்தது; ஏதடா! இவனும் என்னென்னமோ உளறுகிறானே என்று பயந்தார். அதைச் சூக்ஷமமாகத் தெரிந்து கொண்ட எம்பெருமான், புன்னகைசெய்து, "கம்பவுண்டர் சார்! நானும் பைத்தியக்காரனல்ல. உண்மையில் நடந்ததைத்தான் சொன்னேன். இன்று காலை முதல், வக்கீலைத் தேடித் தேடித்தான் அலைந்தான் என் நண்பன். அவனுக்கு உதவியாக நானும் சென்றேன். வக்கீல்தேடிய பலன் மண்டையில் அடி, மயக்கம் என்று ஆயிற்று. அந்தக் கதையைச் சொல்கிறேன்கேளும்" என்று கூறினான்.

ஃ ஃ ஃ

ஒருநாள் மாலை, நான் வேலை பார்த்துவரும் வைரக் கம்பெனி சொந்தக்காரரர் சொக்கலிங்க செட்டியார், தமது அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது நான் கடை விஷயமான ஒரு முக்கியமான தகவலை விசாரிக்க அங்கே சென்றேன். செட்டியார் அறைக்குள்ளே பேச்சுச் சத்தம் கேட்கவே, வெளியே நின்றேன். செட்டியார் மிகக் கோபத்துடன் பேசிக்கொண்டிருந்தார்.

"முடியுமா? முடியாதா?"

"முடியவே முடியாது!"

"நிச்சயமாக முடியாதா?"

"யாரடா அவன், சுத்த பன்னாடையாக இருக்கிறே, என் மகளை ஏதாவது ஒரு பாழுங் கிணற்றிலே பிடித்துத் தள்ளினாலும் தள்ளிவிடுவேனே தவிர, உனக்குத் தரமுடியாது."

பெண் தரமுடியாது, என்று கோபமாகப் பேசியது செட்டியார்; எனக்குத் தூக்கிவாரிப் போட்டது; ஏனெனில், செட்டியாருக்குப் பெண்ணே கிடையாது!"

"ஆச்சர்யமாக இருக்கிறதே" என்று கூறினான் கம்பவுண்டர்.

"என் வாழ்நாளிலேயே நான் அது போன்ற ஆச்சரியத்தை அடைந்ததில்லை. செட்டியாருக்கு ஒரே மகன், பெண் கிடையாது. அவருக்குத் தாசி சிநேகம், எதுவும் கிடையாது. ரொம்பக் கர்நாடகப் பேர்வழி, பக்தர். ஆகவே அவர், யாரிடமோ, "என்பெண்ணை உனக்குத் தரவேமுடியாது" என்று கூறுவது கேட்டால், எனக்கு எப்படி இருக்கும். கதவு திறக்கும் சத்தம் கேட்டது, நான் விரைவில் மறைந்து கொண்டேன் ஒருபுறமாக. அறைக்கு உள்ளே இருந்து, இருதயநாதன் வந்தான்—அன்றுதான் நான் இவனை முதன்முறையாகப் பார்த்தது. என்னை அவன் பார்க்கவில்லை. கோபமாகவெளியே போய்விட்டான். நான் கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, செட்டியாரிடம் பேசி விட்டு, வழக்கப்படி வீட்டுக்குப் போனேன், உள்ளே தாழ்வாரத்திலே, இருதயநாதன் உட்கார்ந்து கொண்டிருந்தான்!"

"அடேடே! ஆச்சரியம் வளருகிறதே" என்றான் க்ம்பவுண்டர்.

"முடிய வில்லை ஆச்சரியம்? கேளுங்கள் மற்ற விஷயத்தை. யார்? பெயர் என்ன? எதற்காக வந்தாய்? எந்த ஊர்? என்று கேள்விமேல் கேள்வி பூட்டினேன், அவன் செட்டியாரிடம் பேசிக்கொண்டிருந்தது எனக்குத் தெரியுமென்றே நான் காட்டிக்கொள்ளவில்லை.

"உங்கள் பெயர்தானே எம்பெருமாள்பிள்ளை?" என்று என்னைக் கேட்டான் அவன், 'ஆமாம்!' என்றேன், வைர வியாபாரம் சொக்கலிங்கம் செட்டியார் கடையிலே கணக்கு எழுதுபவர் நீங்கள் தானே," என்றான், ஆமாம் என்றேன்; உங்களால் எனக்கு ஒரு காரியம் !ஆகவேண்டும், என்றான், "முடிந்தால் செய்கிறேன், முதலிலே நீங்கள் யார், என்ன விசேஷம், இவைகளைக் கூறுங்கள்" என்று நான் கேட்டேன். "என் பெயர் இருதயநாதன், இருப்பிடம், திருநெல்வேலி அருகே ஒரு கிராமம்" என்றான், "சரி! என்னால் என்ன ஆக வேண்டும்?" என்று கேட்டேன், அவன் என்னிடம் ஏதும் கூறுவதற்குள், மற்றொரு கேள்வியும் கேட்டு விட்டேன், "இன்று செட்டியாரிடம் ரொம்பக் கோபமாகப் பேசிக்கொண்டிருந்தீரே?" என்றேன், அவன் ஆச்சரியப்பட்டான், "அவர் சொல்லவில்லை, நான் தற்செயலாகக் கேள்விப்பட்டேன்" என்று கூறி அவன் ஆச்சரியத்தைத் தணிய வைத்தேன்.

"நான் கூறப்போவது கேட்டு ஆச்சரியத்தால் திடுக்கிட வேண்டாம்" என்று அட்டவணை போட்டான் இருதயநாதன். "கதை இருக்கட்டும், முதலிலே ஒரு விஷயம் கூறிவிடு, செட்டியாருக்குப் பெண் ஏது?" என்று நான் கேட்டேன். கோபமும் வெறுப்பும் வெளிப்படச் சிரித்தான் இருதயநாதன்.

(13-ஆம் பக்கம் பார்க்க)

# சோழமாதேவி

ராஜிமணாளன்



## [24]

## அவரும், அலெக்சாண்டரும்!

ரோகணாவின் சிற்றிளவரசன், தீசன் தீகவாபிக்குப் போய்ச் சேர்ந்த அதே நேரத்தில், ரோகண மன்னர், அவரால் கட்டப்பட்ட சிதுள பர்வத விகாரையில் வந்து முகாமிட்டுத் தங்கி இருந்த பௌத்த தேரர்களது தலைவரான ஆமத்திய மகாதேரரைக் கண்டு உரையாடிக் கொண்டிருந்தார்.

ஒருவர்க் கொருவர் முறையே முகமன் கூறிக் கொண்டனர். ஆமத்தியர், தாம் ரோகணாவுக்கு வருகை தந்து பல்லாண்டுகள் கடந்துவிட்டனவென்றும், அந்த இடைக்காலத்தில், நாடும் எவ்வளவோ மாறி இருக்கிறது என்றும், மக்களது மனோநிலைகள் கூட பெரிதும் மாற்றமடைந்திருப்பது வெளிப்படையாகவே தெரிகிறது என்றும் குறிப்பிட்டார்.

அதற்கு மறுமொழியாக காகவன தீசர், "மக்களது சமுதாய வாழ்க்கை மேம்படுவதும் அல்லது தாழ்ந்து போவதும் அவர்களை வழிநடத்திச் செல்லும் தலைமையின் அறிவாற்றலைப் பொறுத்திருக்கிறது; ரோகணாவில் இன்று அந்த ஆற்றல் குறைந்திருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொண்டேயாக வேண்டும்" என்றார்.

ஆமத்தியருக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அதனை வெளிப்படையாகவே சிந்திவிட்டு "ரோகண மன்னர் கூறும் குற்றச்சாட்டு பொதுவானதென்றால், அது அனைவரையுமே பாதிக்கக் கூடியதாகும்! மன்னர் அவர்களே! தேரர்களுக்கு இப்போது நான் தலைமையேற்று பௌத்தக் கழகத்தை நடத்திச் செல்கிறேன்! என்றாலும், சில தேரர்கள் கட்டுப்பாட்டினை மீறிக் கொண்டிருக்கிறார்கள். அதனைத் தடுத்து நிறுத்த அறவே முடிவதில்லை. நேற்று முன்தினம் பாருங்கள், நாகத்வீபத்திலுள்ள ஜம்புகோள விகாரையில் இருக்கும் ஒரு தேரர், பெண் ஒருத்தி தொடர்பாகக் கொலைக் குற்றத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறார் என்று தகவல் வந்திருக்கிறது. மனதுக்கு எவ்வளவு துன்பம் தரக் கூடிய செய்தி இது! தேரர்கள்மீது சுமத்தப்படும் குற்றத்தின் தன்மையின் இலட்சணத்தைப் பார்த்தீர்களா?" என்று வருத்தத்துடன் கேட்டார்!

"உண்மைதான்! மக்களது மனோநிலைக்கு முழுப் பொறுப்பும் தலைமையேற்றிருப்பவர்களது அறிவாற்றல்தான் காரணம் என்பது ஒட்டு மொத்தமாகப் பொருந்தவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன்! ஆனால் மகாதேரர் அவர்களே, ஓரளவுக்கேனும், தலைமையிடத்திலிருப்பவர்களுக்குப் பொறுப்பில்லை என்று தட்டிக் கழித்துவிட முடியுமா? என்றார் காகவன தீசர்.

"தனி ஒரு மனிதனுடைய செயல்கள் அவன் தனியனாகவே இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும்வரையில், அது யாரையும், எந்தக் காலத்திலும் பாதிப்பதாகவோ, அன்றி பற்றிக் கொள்வதாகவோ அமைந்து விடுவதில்லை. ஒருவருக்குமேல், இன்னொருவர் அல்லது பலர் என்று கூடிச் செயல்படும்போது தனித்துவம் மறைந்து, குழு மனப்பான்மை மிகுந்து விடுகிறது. இதுவே சமுதாயத்தில் தலையெடுக்கும் போது, சமுதாயம் சீர்கெட்டுவிட்டது என்றோ, அன்றி சீரடைகிறது என்றோ சொல்லத்தக்க வகையில் அமைந்துவிடும்.

வெளிஉலக வாழ்க்கையின் புற அம்சங்கள் பலரையும் எளிதில் பற்றிக் கொள்வதனாலேயே அந்த மாற்றங்கள் உருவாகின்றன என்பது என் முடிவு. ஆகவே விளைகின்ற எந்த ஒன்றுக்கும் எந்த ஒருவரையும் குறை காண்பதை நான் விரும்புவதில்லை" என்று கூறும்போது, ஆமத்திய மகாதேரர் அவர்களது முகம் பொலிவிழந்து கூம்பியது.

அதுபோன்ற பொதுவிஷயங்களைப் பேச எப்போதுமே ஆமத்தியர் தயங்கமாட்டார் என்பதும், பேசுவதற்கு அவரே ஊக்கம் தருவார் என்பதும் ரோகண மன்னருக்கு நன்கு தெரியும்.

ஆனால், அன்றைய நிலை, அதற்கு மாறானதாக இருந்தது. இப்போதைய உரையாடலின் தன்மையை அவர் விரும்பவில்லை என்பதுபோல உணர்ந்தார் மன்னர். எனவே அவர் தான் வந்த விஷயம் பற்றிப் பேசிவிட்டு விரைவில் திரும்பி விடலாம் என்று கருதினார். அதையொட்டி அவர், "ஆமத்தியர் அவர்கள், பௌத்த சபையைக் கூட்டுவதில் அரும்பாடு பட்டுக் கொண்டிருக்கிறார்கள் எனக் கருதுகிறேன்" என்றார்.

"உண்மைதான்! கழகத்தை விரைவில் கூட்டி சில பொதுப் பிரச்னைகள் பற்றி வாதித்து முடிவெடுக்கலாம் என்று நினைக்கிறேன்! காலம் கனிந்து வர மறுக்கிறது" என்றார் ஆமத்தியர்.

"சாதாரண காரியமா அது? எளிதான ஒன்றா என்ன! மிகச் சிரமப்பட வேண்டியிருக்குமே! மகாதேரர் அவர்கள் தலைமையகத்தில் இருந்துகொண்டே ஓலைகள் அனுப்பி காரியங்களைக் கவனிக்கலாமே!"

"எளிதான காரியம்தான் அது. சபைக் கூட்டம் கூடி கலையட்டும் என்று மட்டுமே நான் கருதுவதாக இருந்தால், அப்படிச்செய்வது நல்லதுதான். நான் சில முடிவுகளை மேற்கொள்ள விரும்புகிறேன். சில மாற்றங்களைக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். அதற்காகத் தங்களைப் போன்றவர்களை யெல்லாம் சந்திக்க வேண்டியிருக்கிறதே! நேரிடையாகக் கலந்து பேசி, எனது விழைவுகளை எடுத்துக் காட்டி கருத்தறிய வேண்டியிருக்கிறதே!"

"அதுவும் உண்மைதான்! மகாதேரர் அவர்கள் எத்தகைய மாற்றத்தை விரும்புகிறார்கள்?"

"பிறக்கின்ற ஒருமனிதன், அவன் பிறப்பெடுத்த போதில், மதம், இனம், சமூகக் கட்டுப்பாடுகள், சாதி ஆச்சாரங்கள் இவைகள் எதனாலும் தீண்டப்படாதவனாகத்தான் இருக்கிறான். அவன் வளர வளர, சமூகக் கட்டுப்பாடுகள் என்று எவை எவையோ அவனைத் தானாக வந்து அடைந்து விடுகின்றன. அப்போது அவனும் மாற்றமடைகிறான்; மனமும் மாறுதலடைந்து விடுகிறது! இந்த மாற்றங்கள் ஒருவனைப் பற்றிக் கொள்ளும்போது, பற்றிக் கொள்ளப்பட்ட மனிதன், மனிதன் என்பவனுக்குரிய இலக்கணங்கள், இலட்சியங்கள் எதுவும் குன்றாதவனாக, வீரபுருடனாக, எந்தக் காரணத்துக்காகவும், எந்த ஒருவனுக்கும் தலைகுனிந்து, நடவாதவனாக செம்மாந்த தன்மையில் இயங்குபவனாக இருக்கும்படியாக நாம், நமது பௌத்தக் கொள்கைகளில் சில தீவிர மாற்றங்களைச் செய்ய விரும்புகிறேன்."

"அப்படியா! மகிழ்ச்சி! மகிழ்ச்சி மகாதேரர் அவர்களே! மெத்தவும் பாராட்டப்பட வேண்டிய திட்டம்தான்! இன்றைய நிலையில், பௌத்தர்களாக இருந்துகொண்டிருக்கும் சில பேர், தாங்களும் பௌத்தர்கள்தான் என்று சொல்லிக்கொண்டே, பல புறம்பான இலட்சியங்களைச் சுமந்துகொண்டு, அதனைச் செயல்படுத்தத் துடியாய்த் துடிக்கிறார்கள்! இந்த நிலையில், பௌத்த கொள்கைகளும், இலட்சியங்களும் இப்படிப்பட்டனவாகத்தான் இருக்க வேண்டும் என்று தெளிவாக, திட்டவட்டமாக வகுத்துச் செயல்படச் செய்வது மிக மிக அவசியமானதுதான்! ஆமத்தியர் அவர்களே, புத்தபிரானை இப்போது உங்கள் உருவத்தில் பார்க்கிறேன்! மகிழ்ச்சியடைகிறேன்! உங்களுக்கு வெற்றி கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்!" என்று மனந் திறந்து பேசி தன் மகிழ்வினைத் தெரிவித்துக் கொண்டார் காகவன தீசர்.

"அந்த வெற்றி எனக்குக் கிடைக்காது போலிருக்கிறது அரசே!' என்றார் மகாதேரர். இதனை அவர் சொல்லும்போது அவர் குரல் தழுதழுத்தது. சோகம் கப்பிக்கொண்டது. சில வினாடிகளுக்குப் பின்னர், "தீசர் அவர்களே! உங்கள் குமாரன் கமணனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் நந்திமித்திரன் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?" என்று மன்னர் சற்றும் எதிர்பாராத ஒரு வினாவைப் போட்டார் ஆமத்தியர்.

ஒருகணம் அதிர்ந்து அடங்கிய அரசர், "ரோகணவைப் பற்றிக்கொண்டுவிட்ட ஒரு நோய் அவன்! வாளும் வாளும் சந்திக்கவேண்டும் என்பதுதான் போர் முறை என வகுக்கப்பட்டிருக்கும்போது, வாளும், வஞ்சகமும் சந்திக்கவேண்டும் என்று புதிய இலக்கணம் படைத்துக் கொண்டிருக்கிறான் அவன்!" என்றார் மன்னர்.

"சரியாகச் சொன்னீர்கள்! ரோகண அரசியலில் அவனுக்குத் தரப்பட்டிருக்கும் இடம், மிக அதிகமானது! முறை கேடானது என்பது எனது மதிப்பீடு. அரசே, அந்த நந்திமித்திரனை நாடுகடத்திவிடுவது என்பதுபற்றி உங்களால் யோசிக்க முடியுமா?" எனக் கேட்டார் ஆமத்தியர்.

நந்திமித்திரனையும், அவனது போக்கினையும் பற்றி அரசர் எவ்வளவோ சிந்தித்திருந்தும், இப்போது ஆமத்தியர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, அவனை நாடுகடத்துவதுபற்றி மட்டும் சிந்தித்ததே இல்லை! இப்போது மட்டுமல்ல! சிந்திப்பது என்பது எளிதான காரியம்தான்! சிந்தனைகளின் முடிவுகளுக்குச் செயல் வடிவம் தருவது என்பது முடிந்த ஒன்றா? எல்லோராலும், எப்போதும் அது முடியுமா?

மகாதேரர் அவர்களது வினாவைக் கேட்டு சில வினாடிகள் வரையில் எதுவுமே பேசாமல் அடங்கிப் போன ரோகண மன்னரது மனதில் இப்படிப்பட்ட எண்ணங்கள் எழுந்து அடங்கின. போர் தொடர்பாகத் தான் மேற்கொண்டிருக்கும் புதிய முடிவுகளுக்கு, இதுபோன்ற சிந்தனை இடையூறு உண்டாக்கி விடக் கூடுமே என்று யோசித்துப் பார்த்தபோது, விகாரதேவியையோ, கமணனையோ இது விஷயத்தில் திருப்திப்படுத்திவிட முடியாது என்று முடிவு மேற்கொண்டார். எனினும், அவனுக்குத் தரப்படும் முக்கியத்துவத்தைக் குறைப்பதுபற்றி யோசிக்கத் தான் வேண்டும் என்று மனதில் திடப்படுத்திக் கொண்டு "ரோகணவின் இப்போதைய நிலைமைக்கு நந்திமித்திரனை நாடுகடத்துவது என்பது இயலும் என்று நான் நம்பவில்லை. ஆனால், அவனுக்குத் தரப்படும் முக்கியத்துவத்தைக் குறைக்க முனையலாம்!" என்றார் மன்னர்.

"அதுகூட உங்களால் முடியப்போவதில்லை" என்று கூறினார் ஆமத்தியர். அது கேட்டு மன்னரது மனம் வருந்தினாலும், அதனை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ள முடியாமல், உங்கள் உதவி எனக்குக் கிடைக்குமானால், அது என்னால் நிச்சயம் முடியும் மகாதேரர் அவர்களே!" என்றார்.

"ரோகண நாட்டு மன்னருக்கு என் உதவியா? அப்படி என்ன என்னிடமிருந்து எதிர்பார்க்கிறீர்கள்?" எனக் கேட்டார் ஆமத்தியர்.

"நான் அனுராதபுரம் மன்னர் எள்ளாளர்மீது என்றுமே பெருமதிப்புடையவன் என்பது தங்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன்!" என்றார் மன்னர்.

"அதுமட்டுமல்ல அரசே! அந்த எள்ளாளர்மீது ரோகணநாடு போர் தொடுக்க ஆயத்தங்களில் ஈடுபட்டுவிட்டது என்பதுகூட எனக்குத் தெரியும்" என்றார் ஆமத்திய மகாதேரர். அதனைச் சொல்லிவிட்டு சிறிது இடைவெளிவிட்டு, "நான் துறவு மேற்கொண்டவன் என்பதும், என் நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்ட செய்திகள் இவை என்பதும் தங்களுக்குத் தெரியுமில்லையா?" என்று கேட்டார். மன்னரது பதில், அவரது உதடுகளைவிட்டு உதிரத் தொடங்கும் முன்பு "அரசே! பௌத்தர்களது அக வாழ்க்கை தூயதாக இருக்கவேண்டும் என்று சற்று முன்பு கூறினேனே அத்துடன் தொடர்புடையவை இந்த செய்திகள்! அதனால்தான் இந்தத் துறவி, அரசியல் பற்றியெல்லாம் பேசவேண்டியிருக்கிறது" என்றார்.

"மகாதேரர் அவர்களது பணிகளும், கடமைகளும்பற்றி நான் அறியாதவன் அல்லவே தேரர் அவர்களே! தங்கள் உயரிய யோசனைகளைக் கேட்க எவ்வளவு பெரிய அறிவாளர்கள் எல்லாம் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அறியமாட்டேனா? இப்போது நான் தங்களிடம் உதவி கேட்டேனே! இது தொடர்பான உதவிதான்! போர் தொடர்பான உதவிதான்!" என்றார் கம்மிய குரலில் தீசர்.

"போருக்குப் பௌத்தர்களைத் திரட்டித்தர வேண்டுமா என்ன?" என்று சற்றுக் கடுமை கலந்து கேட்டார் ஆமத்தியர்.

"ரோகணுவின்மீது உங்களுக்கு அனுதாபம் உண்டாக்கமுடியாது என்ருல். ரோகண நடவடிக்கைகள் உங்களுக்குப் பல சிக்கல்களை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்பதும் எனக்குத் தெரியும். என்ருலும், என் கருத்துக்களை எடுத்துக்காட்ட வேண்டுவது என் கடமை என்று நினைக்கிறேன்" என்று கூறிவிட்டு, சிறிது யோசித்து "மகாதேரர் அவர்கள், ரோகணுவின் போர் நடவடிக்கைகளை, எந்தச் சூழ்நிலையிலும் ஆதரிக்கக்கூடாது என்று, பௌத்த தேரர்களுக்கு ஓலையனுப்பி, அவர்களும் இதில் நேரடியாக அல்லது மறைமுகமாகக்கூட கலந்துகொள்ளவோ, ஆதரவு காட்டவோ கூடாது என்றும் தகவல் தரவேண்டும். அனுராதபுரத்தின் மீது, ரோகணு போர் தொடுத்தால், அதிலே பௌத்தர்கள் பங்குபற்றக் கூடாது என்பது தங்கள் உத்திரவாக இருக்கவேண்டும் என்பதுதான் என் விழைவும், வேண்டுகோளும்!" என்று கூறினுர் ரோகண மன்னர்!

"வியப்பாயிருக்கிறதே அரசே, உங்கள் கோரிக்கையைக் கேட்க! இதைவிட நீங்கள், ரோகணு போர் தொடுக்காமலிருக்கத்தக்க நடவடிக்கைகளை நேரடியாகவே மேற்கொள்ளலாமே!" என்ருர் ஆமத்தியர். தொடர்ந்து "பௌத்த மகாசபையின் பழியை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறீர்களா என்ன?" என்ருர்.

"போர் முயற்சிகளில் பௌத்தர்களின் பங்கு இருக்கக்கூடாது என்ற என் வேண்டுகோள் காரணமாக, பௌத்தர்களின் பாவம், தங்களை வந்தடையும் என்ருல், புத்தபிரான் உயிரோடிருந்தால், இது கேட்டு அவர்கூட தலை கவிழ்த்துக் கொள்வார் தேரர் அவர்களே! போர் வெறிக் கொள்கைக்கு பௌத்தம் அனுமதி வழங்குவதாக நான் அறிந்தவரையில் தெரியவில்லையே" என்ருர் காகவனதீசர், சற்று வருத்தத்துடன்.

"ரோகண மன்னரின் கண்ணேட்டம் எனக்குப் புரிகிறது; ஆனுல், இப்போதைய பௌத்தர்களது மனநிலையில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் பற்றியும் மன்னர் புரிந்துகொள்வது மிகவும் அவசியம். மன்னர் அவர்களே! பௌத்தர்களானுலும் சரி, சைவர்களானுலும் சரி, அவர்கள் எல்லோருமே மனிதர்கள்தான் என்பதை முதலில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அந்த மனங்களில், அவா, வெகுளி, அழுக்காறு முதலியவைகள் மலிந்துகொண்டே வருவதனை, எந்த மதமும் தடுத்து நிறுத்திவிடவில்லை. ஒரு மனிதன், அவன் சார்ந்திருக்கும் மதத்தினுல் தூய்மைப்படுத்தப் படுவானுனுல், ஞாலத்தில் இன்று எந்த அளவுக்கு நிம்மதி வாழ்க்கை இருந்துகொண்டிருக்கும் தெரியுமா? ஏன்? ஒரு புத்தரோ, அசோகனேகூட பிறந்திருக்க வேண்டிய அவசியம் இல்லையே! நமது நாட்டையே எடுத்துக்கொள்ளுங்கள்! எத்தனை பௌத்த விகாரைகளும், தூபங்களும் இருக்கின்றன? அன்ருடம் அமைதி வாழ்க்கையின் அருமைபற்றி அறிவுறுத்திக் கொண்டே இருக்கவில்லையா? இருந்தும், எவ்வளவு புகைச்சல்கள்? எவ்வளவு குழப்பங்கள்! இவையெல்லாம் எதனுல்? மனிதன் வேறு—மதம் வேறு என்பதைத்தானே இவைகள் எல்லாம் காட்டுகின்றன? பௌத்தர்கள் மட்டும் விதிவிலக்காக இருக்க முடியுமா அரசே!" என்ருர் ஆமத்தியர்.

## சுவைத்ததைச் சொல்கிறோம்

22—8—71-ஆம் தேதி காஞ்சி இதழில் வந்துள்ள "இன்னுமா பொறுமை?" என்ற சிறப்புக் கட்டுரையை எழுதிய புலவர் அரிமதி தென்னகன் அவர்களை எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. கொதித்தெழ வேண்டிய யார் யாரோ குந்திக் கிடக்கிருர்களே — பின் ஏன், எலிகள் "அத்தான் விளையாட்டுக்கு" அழைக்காது?

அழ. கரு. பொன்னம்பலம், அரிமழம்.

தென்மொழி—பெருஞ்சித்திரன் அவர்களது எழுத்துக்கள் மட்டுமே அழுக்காறு கொண்டவை அல்ல; எண்ணங்களும் செயல்களும்கூட அப்படித்தான் என்பது எனக்குத் தெரியும்! எதை, எவரிடம் எதிர்பார்த்தாரோ! என்ன ஏமாற்றமோ?

கே. எல். இராகவன், சென்னை-17

புலவர் அரிமதி தென்னகன் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிருேம். நாங்கள் எரிமலைதான். எங்களிடம் எலிகள் விளையாடிவிட முடியாது. அத்தான் விளையாட்டுக்களை நாங்கள் அனுமதிக்கும் அளவுக்கு அறிவு அழிந்துவிடவில்லை. நிலைமைகளைப் பார்க்கிருேம்; நிலைகுலையுமானுல், கூன் விழுந்த முதுகுகள்கூட நிமிர்ந்துவிடும்! முப்புரியோரை, தமிழ்த் துரோகிகளை தமிழ்நாட்டிலிருந்து துரத்திவிட வேண்டிய வேளை நெருங்கிக்கொண்டிருக்கிறது இன்னும் நெருங்கட்டும்; அருகே நெருங்கட்டும்.

மு. சு. மணியன், பொள்ளாச்சி

22—8—71-இல் வந்துள்ள அறிஞர் அண்ணுவின் "காமராசர் கதை" வெறும் கட்டுரையல்ல தமிழகத்தில் அரை நூற்ருண்டு பகுத்தறிவு இயக்க வரலாறு அது தமிழர்கள் ஒவ்வொருவரது கரத்திலும் 'காஞ்சி' இத[ழ்] இருக்கவேண்டும். ஏனென்ருல், கழக ஏடுகளிலே[யே] 'காஞ்சி' ஒன்றுதான் பகுத்தறிவுக் கருத்துக்களுக்கு மு[த]லிடம் கொடுத்துக்கொண்டிருக்கிறது.

பி. ரத்னபாண்டியன், சென்னை-

ரோகணநாட்டரசி விகாரதேவியைப்பற்றி, ஆசிரிய[ர்] இது வரை எடுத்துக் காட்டி வந்ததற்கு மாறு[க] 22—8—71-ல் ஒரு ஏமாளியாக்கிவிட்டாரே! விகா[ர] தேவியும் ஏமாந்தாள் என்ருல், மன்னர் காகவனதீச[ர்] மகா கெட்டிக்காரர்தான்!

ஆர். தியாகராசன், கும்பகோண[ம்]

ஒவ்வொரு இதழ்களில், கணக்கின்றி கவிதைக்கு இ[ட]மளித்து விடுகிறீர்கள். சில இதழ்களில் கவிதைகளை காணவே முடிவதில்லை. ஏன் இப்படி? ஒருமுறை[யை] நிர்ணயித்துக் கொண்டால் என்ன?

புலவர் கு. இளங்கோவன், சென்னை-

'காஞ்சி' இதழ் ஒன்றில்தான் அமரர் அண்[ணா] அவர்களது படத்தையாவது பார்க்க முடிகிறது; அதுவு[ம்] விட்டுவிட்டு. கிழமை தவருமல் அவர் படம் இட[ம்] பெறச் செய்யக்கூடாதா?

எம். பெரியசாமி, சேல[ம்]

காகவன தீசருக்கு, ஆமத்தியர் தரும் விளக்கங்ள் மூலம் எந்தப் பொருள் கொள்வது என்பது தழப்பமாக இருந்தது. ஆமத்தியரின் உதவி தனக்குக் கிடைக்குமா கிடைக்காதா என்பதை நிர்ணயிக்க முடியாது தவித்தார். நேரிடையான பதிலைக்கேட்டுப் பெற்றுவிட வேண்டுமென்று கருதினார்,

"தேரர் அவர்களே! என் விழைவுக்குத் தங்கள் பதிலை நேரிடையாகவே தெரிந்து கொள்ள விரும்புகிறேன்!" என்றார்.

ஆமத்தியர் இகழ்ச்சிச் சிரிப்பொன்றைச் சிந்திவிட்டு, "அரசே! இதுவரையில் நீங்கள் எத்தனை பௌத்த விகாரைகளைக் கட்டி முடித்திருக்கிறீர்கள் என்று நினைவு படுத்திச் சொல்ல முடியுமா?" என்றார்.

"நினைவு படுத்த வேண்டியதில்லை. சரியாகவே சொல்ல முடியும்! அறுபத்து மூன்று விகாரைகள் முடிவுற்று செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அறுபத்துநான்காவதாக, இப்போது மகானுகல சேதியத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறேன்" என்றார். உடனே ஆமத்தியர், "அந்தச் சேதியம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது?" எனக் கேட்டு முடிப்பதற்குள், ரோகண மன்னர் "முடிவுறும் நிலைமையை எட்டிவிட்டது; இரண்டொரு திங்கள்களுக்குள்ளாகவே முற்றுப் பெற்றுவிடும்!" என்றார்.

"அதன் புனிதத் திறப்புவிழாவை, இதுவரையில் நடைபெற்றது போலவே சீரும் சிறப்பும் மிகுந்ததாக நடத்துவதாக உத்தேசித்துள்ளீர்களா? அல்லது இப்போதைய தங்கள் விரக்தி நிலைக்கேற்ப சாதாரண தன்மையில் நடத்திவிட உத்தேசமா?" என்று கேட்டார் ஆமத்தியர்.




தன்னுடைய வேண்டுகோளுக்கும், மகாதேரரின் வினாக்களுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என் பதிலே ஒரு கணம் சிந்தை செலுத்திவிட்டு, "எப்படி அமைய வேண்டும் என்று மகாதேரர் அவர்கள் விரும்புகிறார்களோ—அப்படியே நடைபெறச் செய்வதில் சங்கடம் எதுவும் இருக்காது" என்றார்.

ஆமத்தியர், மறுபடியும் ஒருமுறை வாய்விட்டுச் சிரித்துவிட்டு "அரசே! மற்றவர்களது விழைவுகளில் நான் தலையிடுவது என்பது ஆகாத காரியம் என்றாலும், விரைவில் கூடவிருக்கின்ற பௌத்தக் கழகத்தின் மகாசபைக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னதாகத் தங்கள் சேதியத் திறப்புவிழா நடைபெற வேண்டும் என்று நான் சொன்னேனானால்-அது தங்களது வேண்டுகோளுக்கு நான் தரும் பதில் என்று நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்; புரிகிறதா அரசே! உங்களது வேண்டுகோளுக்கு உரிய பதில், அந்தச் சேதியத் திறப்பு விழாவின்போதுதான் தரமுடியும், ஆனால் முக்கியமாக நீங்கள் ஒன்றை, அந்தச் சந்தர்ப்பத்தில் செயல்படுத்தித் தீரவேண்டும். வழக்கம்போல சிறப்பான முறையில் அது நடந்தேற எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளுங்கள்! எல்லா தேரர்களும் அதிலே பங்கேற்கத் தக்க வகையில் அனைவருக்கும் அழைப்பு அனுப்புங்கள். இயன்றவரையில் குடிமக்கள் எல்லாருமே அதிலே பங்குபற்றத் தக்க முறையில் ஏற்பாடுகள் அமையட்டும்! முக்கியமாகக் கவனிக்க வேண்டிய அம்சம் இந்த நாடே அந்த சேதியத் திறப்பு விழாவில் பங்கேற்கிறது, இருவரைத் தவிர! புரிகிறதா அரசே! இருவரைத் தவிர! யார் அந்த இருவர் என்பதையும் நானே சொல்லி விடட்டுமா?" என்றுக் கேட்டுவிட்டு, காகவனதீசரின் கண்களைக் கூர்ந்து கவனித்துவிட்டு, அதன் மூலம் மன்னரின் கலக்கத்தை மிகுதிப் படுத்தினார்.

"யார் அந்த இருவர்?"—மகாதேரர் கூறிய வார்த்தைகளில் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பிய்த்துச் சேர்த்துச் சொன்னார்;— காகவனதீசர்! கேள்வி மட்டுமல்ல; பதிலும், தான்தான் தரவேண்டும் என்பதனால், உடனே சொன்னார்: "புரிகிறது தேரர் அவர்களே! யார் அந்த இருவர் என்பது எனக்குப் புரிகிறது. இன்னும் இரண்டொரு கிழமைகளுக்குள்ளாகவே, சேதியப் பணிகளை முடித்துவிட முனைவேன். ஒரு திங்கள் வரையில் கூட என்னால் பொறுத்திருக்க முடியாது. விரைவில் தங்கள் பதில் என்ன என்பது எனக்குத் தெரிந்தாக வேண்டும். அது தெரியும்வகையில் சேதியப் பணிகள் முற்றுப்பெறச் செய்கிறேன். விழாவின்போது தலைமையேற்று வீற்றிருக்கும் உங்கள் கண்களை, அங்குமிங்குமாகச் சுழலச் செய்வேன். அவற்றை அலைபாயச் செய்வேன். கண்களை ஏமாற்றத்துக் குள்ளாக்குவேன், ஏமாந்துச் சுருங்கும் உங்கள் கண்களைக் கண்டு, களிப்பேன்! யார் அந்த இருவர்? என்பதனைப் புரிந்து கொண்டேனா இல்லையா என்பதனை, உங்கள் கண்களைப் பார்த்து என் கண்களால் கேட்பேன்; போய் வரட்டுமா மகாதேரர் அவர்களே" என்றார், கவலை தோய்ந்திருந்தாலும், ஒரு வகையான நச்சுச் சிரிப்புடன்!

தான் சுட்டிக்காட்டும் அந்த இருவரை, ரோகண மன்னர் நன்றாகப் புரிந்துகொண்டார் என்று தன்னுள் எண்ணிக்கொண்டு "நல்லது அரசே! விரைந்து செயல் படுங்கள்!" என்று கூறி உள்ளே எழுந்து செல்ல திரும்பினார். தீசரும் இரண்டடிகள் எடுத்து

## மதுவிலக்குப் பிரச்சினையில் அகில இந்தியக் கண்ணோட்டம் எங்கே?

"மதுவிலக்கை ஒத்திவைக்கிறோம் என்றால்: 'வேறு வழியில்லை' என்ற காரணத்தால் செய்கிறோம்; 'இந்தியா முழுவதும் மதுவிலக்கைக் கொண்டுவர வேண்டும்' என்ற காரணத்திற்காகத்தான் இதை நாங்கள் வருத்தத்துடன் செய்கிறோம்.

"பாண்டிச்சேரியிலும்-கேரளத்திலும் - ஆந்திரத்திலும், கள்ளுக்கடை - சாராயக் கடைகளை வைத்து விட்டுத் தமிழ் நாட்டில் மட்டும் மதுவிலக்கைக் கடைப்பிடிப்பது என்பது சரியன்று என்ற காரணத்தால்தான் ஒத்திவைக்கிறோம்; ஆயினும் எங்கள் கொள்கை, 'மதுவிலக்கு இந்தியா முழுவதிலும் செயல்படுத்தப்பட வேண்டும்' என்பதுதான்; அதற்காகத்தான் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்ய புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் குழு ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது தி. மு. கழகம்!

"மதுக் கடைகள் திறக்கப்பட்டுவிட்ட காரணத்தால், குடித்துவிட்டு கும்மாளம் அடித்தால் சட்டம் கட்சி வேறுபாடு பாராமல் கடுமையாக அவர்களைத் தண்டிக்கும் என்று நான் எச்சரிக்கிறேன்."

—மதுரைக் கூட்டத்தில் கலைஞர்

---

வைத்து நடக்க ஆரம்பித்தார். அதற்குள் ஆமத்தியர் நின்று, திரும்பி, "அரசே! விழாவின்போது உங்கள் படைவீரர்கள்கூட கலந்துகொள்ள ஏற்பாடு செய்யத் தவறி விடாதீர்கள்!" என்றார்.

ஆமத்தியரின் குரல் கேட்டு நின்ற மன்னர் அவர் சொன்னதைக் கேட்டு, வியந்து, "படைவீரர்கள் கூடவா?" என்றார்.

"ஆமாம் அரசே! அவர்களது பங்கும் முக்கியமானதில்லையா, உங்கள் பிரச்னைக்கு?" என்றார் ஆமத்தியர். "நல்லது அப்படியே ஆகட்டும்!" என்றுசொல்லி நடையை முடுக்கினார் மன்னர். அவர் செல்லும் பாங்கில் சில வினாடிகள் சிந்தை செலுத்தியபடியே நின்று கவனித்துவிட்டு உள்ளே போனார் ஆமத்தியர்.

ஃ ஃ ஃ

சீதள பர்வத விகாரையை விட்டு வெளியேறிய மன்னர், அங்கிருந்து தேரேறி, நிர்மாணமாகிக் கொண்டிருந்த மகானுகல சேதியத்துக்கு வந்து சேர்ந்தார்.

மன்னர் வந்திருப்பதை யறிந்த தலைமைச் சிற்பி திருவல்லப தத்தர் ஓடோடிச் சென்று, வணங்கி வரவேற்றார். திருவல்லபரின் குரலையடுத்து பணியாற்றிக் கொண்டிருந்த பணியாட்களும், துணைச் சிற்பிகளும் கூட" ரோகண மன்னர் வாழ்க! ரோகணு வாழ்க!" என்ற வாழ்த்தொலியை விண் எட்டச் செய்து, அமைந்தனர்.

காகவனதீசர், திருவல்லபர் தொடர வேலை நடைபெற்றுக்கொண்டிருந்த பகுதிகளைச் சுற்றிப் பார்வையிடத் தொடங்கினார்.

"மன்னர் அவர்கள் வரப்போவதை முன் கூட்டியே தகவல்அனுப்பி இருந்தால், பாதைகளை சுத்தம் செய்து வைத்திருக்க வசதியாக இருந்திருக்கும். கூழாங் கற்களும், பருக்கைக் கற்களும், பாதைக்கு இடையூறாக இருப்பதனைத் தவிர்த்திருக்கலாம்!" என்று சொல்லிக்கொண்டே பின்னால் வந்தார் திருவல்லப தத்தர்.

"சில இடங்களில் இப்படித்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது தத்தரே! மன்னர் வரப் போகிறார் என்று முன்னறிவிப்புக்கொடுத்தனுப்பியதும், அன்று வரையில் அலங்கோலமாக இருந்த பகுதிகளையெல்லாம் தூய்மைப்படுத்தி, அலங்கரித்து, பொன்னகரமாக்கிக் காட்டி, ஊரையே புதுப்பித்து விடுகிறார்கள்! வந்து போய்விட்டதும், அந்த ஊரோ, கிராமமோ, பகுதியோ, கேட்பாரற்று, சிந்துவாரற்று பாழ்நகரமாகக் காட்சியளிக்கும்! எல்லா இடங்களிலுமே இந்தப் பழக்கம் இருந்துகொண்டுதானிருக்கிறது. இந்த தீய நடைமுறையை நான் பெரிதும் வெறுக்கிறேன். மன்னர்களானாலும் சரி, அல்லது மதிப்புக்குரிய—மாண்புக்குரிய மற்றவர்களானாலும் சரி, எந்த இடமானாலும், எந்த சந்தர்ப்பந்தமானாலும், சிறப்பான கவனமும் சேவையும் மிகுந்து கொண்டிருக்க வேண்டும்! மன்னரோ, மாண்புக்குரியவர்களோ வருகிறார்கள் என்று சிறப்புச் செய்யப்பெற்ற பகுதிகளை, வந்தவர்கள் சுற்றிப் பார்த்துவிட்டு, எல்லாக் காலத்திலும் இந்தப் பகுதி, இப்படித்தான் எழில் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கிறது என்றெண்ணிக்கொண்டு போய்விடுகின்றனர். அதனால் அந்தப் பகுதியின் வளர்ச்சி அல்லது தேவைகள் நசிந்து போய்விடுகின்றன.

உண்மை நிலைகளை, உள்ளது உள்ளபடி பிரதிபலித்துக் காட்டவேண்டும்! பிரதிபலித்துக் காட்டத் தக்க வகையிலே அந்தப் பகுதிகள் இல்லாதிருக்குமானால், அதனை நிர்வாகக் குறைபாடாகக் கருதி செப்பனிட்டு சிறப்புச் செய்துவிட வேண்டும்! அத்தகைய மனோநிலை நம் நாட்டவர் அனைவருக்குமே ஏற்படவேண்டும்! என்ன தத்தரே நான் சொல்வது?" என்று கூறிவிட்டு ஒரு பெருமூச்சை உகுத்தார். திருவல்லபதத்தரின் பதில் உதிரு முன்பு, மன்னரே பேசத் தொடங்கினார்.

"சிற்பியாரே! என் வருகைக்காக, இந்த இடத்தைத் தூய்மைப்படுத்தி சிறப்புச் செய்து விடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்! அதன் எதிரொலியாக, இங்கே நடைபெற வேண்டிய எவ்வளவு வேலைகள் தடைப்படக்கூடும் தெரியுமா? எங்கெங்கே எதெதனைச் செய்யவேண்டும் என்பதையும் கணித்துக்கொள்வது அவசியமல்லவா!" என்றார்.

"உண்மைதான் அரசே! சேதியப் பணிக... ஒன்றை மட்டும் வைத்து நான் சொல்லவில்லை... நாடெங்குமே தாங்கள் கூறுவதுபோன்ற குறைபா... இருந்துகொண்டுதான் இருக்கிறது. வருகை தருபவ... களும் தாங்கள் வருகை தந்துள்ள இடம், நேற்... எப்படி இருந்தாலும், நாளைக்கு எப்படி இருக்... மென்றாலும், இன்றைக்கு அது கோலாகலமா... இருக்கவேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள்! இ... இயற்கைதானே பிரபு!" என்றார் திருவல்லபர்.

"இயற்கை என்றால், எனக்கு அத்தகைய கோல... கல எண்ணங்கள் எழுவதில்லையே, அது ஏன் தத்த... இன்னொன்றையும் பாருங்கள். சிற்பியாகிய உ... முடன் நான் உரையாடத் தொடங்கும்போது, எ... னையும் ஒரு சிற்பியின் அளவுக்குக் கொண்டுவந்... விடுகிறேன். ஒற்றன் ஒருவனுடனோ, தூதுவ... ஒருவனுடனோ உரையாடும்போதும், நானும் அ... களது இயல்புக்கு என்னை மாற்றிக் கொள்கிறே... மொத்தத்தில் என்னிடம் ஒரு சிறப்பு அம்சம் இரு... தாக நான் கருதிக் கொள்வதுமில்லை. அப்ப... கருதிக்கொள்ள வேண்டும் என்பதையும் ஒப்... கொள்வதில்லை. மக்களில் ஒருவராக நான் இரு... தாக உணர்கிறேன்!"

மன்னரது பேச்சைக் கேட்டு திருவல்லப தத்...

வியந்துவிட்டார் என்றுதான் சொல்லவேண்டும்! நாடாளும் மன்னர் - உலகைப் புரக்கும் உலோக நாயகரின் பிரதிநிதி—என்று கருதப்படும் வேந்தரின் பேச்சா இது? தலைமைச் சிற்பியின் உள்ளம் பெருமையால் நிறைவுபெற்றது. "ரோகண நாடு செய்த தவப் பயன் அது அரசே!" என்று சுருக்கமாகப் பேசி நிறுத்திக்கொண்டார்.

மெள்ள, இகழ்ச்சிச் சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டு, மன்னர், "அதிருக்கட்டும் தத்தரே! திருப்பணிகள் எந்த அளவில் இருக்கின்றன?" என்று கேட்டார்.

"இன்னும் இரண்டு, மூன்று கிழமைகளுக்குள் முற்றுப் பெற்றுவிடக்கூடும். இராப் பகலாக சிற்பிகள், தங்கள் உயிரைக் கொடுத்து செயல்படுகிறார்கள்!"

"என் பாராட்டுக்களை அவர்களுக்குத் தெரிவியுங்கள், தத்தரே! சேதியத் திறப்பு விழாவின்போது அவர்களுக்கெல்லாம் தகுந்த முறையில் சிறப்புச் செய்வோம்! இன்னும் மூன்று கிழமைகள் தேவை என்பது உங்கள் முடிவா? அல்லது நீங்கள் கோரும் அவகாசமா?"

"அந்த அளவுக்குக் கால கெடு தேவைப்படலாம் பிரபு!"

'முடியாது! திருவல்லபரே! இன்னும் ஒரே கிழமைக்குள் இந்தப் பணிகள் முற்றுப் பெற்றுவிட வேண்டும். இப்போதிருக்கும் பணியாட்களைக் கொண்டு, அவ்வாறு முடிக்க முடியாதென்றால், ஆட்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கிக் கொள்ளுங்கள்! என்ன தத்தரே?"

"முயல்கிறேன் பிரபு! செயல் வேகம் என்பது வேறு; மனோவேகம் என்பது வேறு என்பதை மன்னர் அவர்கள்......"

"அறிவேன் தத்தரே! இப்போது என் மனோ வேகத்துக்கு நீங்கள் செயல் வேகத்தைக் காட்ட வேண்டும்! திருவல்லபரே! தேவைப்படுகின்ற — தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில், செயல் வேகத்தை, மனோவேகத்தின் அளவுக்கு முடுக்கிக் காட்டி சிறப்புறுபவனே உண்மைக் கலைஞன்! உண்மையான சேவையும் அதுதான்! அறிவீர் அல்லவா நீர்?"

என்று கேட்டபோது காகவன தீசர், ஒரு மன்னர் என்ற இடத்தில் இருப்பதைக் காட்டிக்கொண்டார்!

"உண்மை அரசே! ஒரு கிழமை என்ன, அதற்குள்ளாகவே முடித்துவிட முயற்சிகளை மேற்கொள்கிறேன்!" என்றார் தலைமைச் சிற்பி.

"மகிழ்ச்சி தத்தரே! உமது செயலாற்றலை நான் அறிவேன்! அந்த ஆற்றலின்மீது நம்பிக்கை வைக்கிறேன்!" என்று சொல்லிக்கொண்டே, தேரின் அருகே வந்து நின்று, தலைமைச் சிற்பியாரிடம் விழிகளால் விடைபெற்றுக் கொண்டு, தேரில் ஏறி அமர்ந்து கொண்டார் காகவன தீசர்!

தேர், மகாகாமா அரண்மனையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. தேரில் அமர்ந்திருந்த காகவன தீசரின் மனமோ, இந்தியாவின் இமயமலைப் பகுதியில் உள்ள ஆப்கானிஸ்தானத்தில் வந்து முகாமிட்டிருந்த கிரேக்கப் பேரரசன் அலெக்சாண்டரைப் பற்றியும், அவனுடைய போர் ஆற்றல் பற்றியும் எண்ணி, ஏதோ சில திட்டங்களை உருவாக்கிக்கொண்டிருந்தது!





★ Matchless Quality
★ Intricately Woven
★ Colourful, And lively

Co-optex

HANDLOOM FABRICS

Cost a lostless... Last a long time

Tamil Nadu Handloom Weavers'
Co-operative Society Ltd.,
(Balasundaram Buildings)
34/1-A, Pantheon Road, Egmore, Madras-8.

"சொக்கலிங்கம் செட்டியாருக்குப் பெண் கிடையாது; ஒரே ஒரு மகன்தானே இருக்கிறான்" என்றான்.

"நீ, பெண் கொடு என்று கேட்டாய், அவர் என் பெண்ணைக் கிணற்றிலே தள்ளினாலும் தள்ளுவேன், உனக்குத் தரவே மாட்டேன் என்றும் சொன்னாரே!" என்று கேட்டேன். "நான் சொக்கலிங்கம் செட்டியாரைப் பெண் கேட்கவில்லையே, சொரூபானந்த ஸ்வாமியைக் கேட்டேன்!! என்று அவன் சொன்னான். நான் மிரண்டேன், புரியாமல். 'இருதயநாதன்' புரியாது உங்களுக்கு. உங்கள் சொக்கலிங்கம் செட்டியார், எங்களுக்குச் சொரூபானந்த ஸ்வாமி, சொக்கலிங்கம் செட்டியாருக்கு ஒரு மகன் இருப்பது போலவே, சொரூபானந்த ஸ்வாமிக்கு ஒரு பெண், பெயர் கருணா! உங்கள் ஆச்சரியம் அதிகமாகி விட்டிருக்கும், விரைவில் போக்கிவிடுகிறேன் இங்கு வைர வியாபாரம் செய்யும் சொக்கலிங்கம் செட்டியார், பல வருஷங்களுக்கு முன்னால், எங்கள் பக்கத்திலே சொரூபானந்த ஸ்வாமியாக உலவி, வைதீகத்தை வியாபாரம் செய்துகொண்டிருந்தார். இப்போதுகூட எங்கள் பக்கத்திலே வந்தால் சொரூபானந்த சாமிகளின் மடாலயம் இருக்கக் காணலாம். அருள் பெற்றவர் என்று, அவரை வணங்காதவர்கள் கிடையாது; வருஷத்துக்கு ஒரு முறைதான் வருவார், இரண்டொரு மாதங்களே தங்குவார், காணிக்கை குவியும், பூஜைகள் பலமாக நடக்கும். சர்வமத சம்மதத்தைப் போதிப்பார், பிறகு போய்விடுவார். எங்கிருந்து வருகிறார், எங்கே தங்குகிறார், இங்கே வராத சமயத்தில், என்பது யாருக்கும் தெரியாது. வருஷத்தில் பத்து மாதம் வனாந்தரங்களிலே வாசம் செய்கிறார் என்றே சகலரும் கூறினர். இப்போதும் கூறுகின்றனர். சித்து விளையாடுபவர் என்று சொல்வார்கள். அவர்கள் அறியமாட்டார்கள் உங்கள் சொக்கலிங்கம் செட்டியாரேதான். பத்து மாதம் வைர வியாபாரம் செய்துகொண்டிருப்பதும், பாக்கி நாட்களிலே எங்கள் பக்கங்களில், சொரூபானந்தராக இருப்பதுமான 'சித்து' விளையாடுகிறார் என்று. அவருடைய தரிசனத்தால் பலன் கிடைக்குமென்று வந்தவர்களிலே, விதவை ஜோதியும் ஒருத்தி. ஜோதி, கிருஸ்து மார்க்கத்தைத் தழுவிய பிறகு வந்த பெயர்; முதல் பெயர், முத்தாயி. ஜோதியின் விதவைத்தனம் சொரூபானந்தரால் போக்கப்பட்டது; கருணா பிறந்தாள். ஊரார் இதை அறியமாட்டார்கள்; ஜோதியும், சொரூபானந்தரே, நாட்டிலே இந்தப் பக்கத்திலே சொக்கலிங்கம் செட்டியாராக இருப்பதைத் தெரிந்து கொண்டவளல்ல. ஜோதி கருணாவைக் குழந்தையாக இருக்கும்போதே விட்டு, இறந்து போனாள். இப்போது அவளுக்குப் பதினெட்டு வயது. அழகி, அறிவாளி, படித்துத் தேறி இருக்கிறாள். இனிமையாகப் பாடுவாள். என்னை மனப்பூர்வமாகக் காதலிக்கிறாள். என் இருதயத்திலே அவளே நாயகி, அவளுக்கு நானே இருதயநாதன்.

"ஆமாம்! இவ்வளவு 'மர்மமும்' உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று நரன் கேட்டேன்.

"அதுவா? அதுவும் ஒரு வேடிக்கைதான். சொரூபானந்த ஸ்வாமி என்ற வேஷத்திலே சொக்கலிங்கம் செட்டி உலவி, மக்களை ஏமாற்றிப் பொருள் பறிப்பதற்கு, உடந்தையாக இருந்தவன், எங்கள் ஊர் ஆசாமி, அவனே பிரதம சீடனாக இருந்தவன்; அவன் மூலமாகவே, சொரூபானந்தரின் புகழ் பரவிற்று.

"ஸ்வாமி, எப்போது வரும்?" என்று அவனைத்தான் ஊரிலே கேட்பார்கள்,

"நேற்றிரவு சொப்பனத்திலே தோன்றினார்; தோன்றி, இன்னும் பத்து நாளிலே வருவதாகச் சொல்லிவிட்டு மறைந்தார்" என்பான் சடையன் என்ற பெயரை ஜடாதரஸ்வாமி என்று மாற்றிக் கொண்ட அந்தக் கபடன்.

"ஸ்வாமி! என் மனதை வாட்டும் விஷயமாக......" என்று பக்தர் கூறவேண்டியதுதான், உடனே சொரூபானந்தர்,

"ஏனப்பா! புதிய வீடு வாங்கி இருக்கிறாயே, அது நல்லதா அல்லவா, என்பதுதானே உன் கவலை" என்று புன்னகையுடன் கேட்பார். பக்தருக்குப் பரமானந்தம், ஸ்வாமி, மனதிலுள்ளதை அறிந்து கூறிவிடுகிறாரே என்று. ஒவ்வொரு பக்தரின் மனதிலிருப்பதையும் சொரூபானந்தர் அறிந்து கூறுவார். ஏன் முடியாது? அவ்வப்போதுதான், சடையனுக்கும் சொக்கலிங்கம் செட்டியாருக்கும் கடிதப் போக்குவரத்து நடக்கிறதே. இந்நிலையிலே, ஜடாதர ஸ்வாமிக்குச், சீடராக இருப்பது அலுத்துப் போகவே, சொக்கலிங்கம் செட்டியார் இனிமேல் சொரூபானந்த ஸ்வாமியாக வர வேண்டியதில்லை, என்று கூறிவிட்டு, ஸ்வாமிகள் ஜோதியில் கலந்துவிட்டார் என்று தெரிவித்துவிட்டான். அவனை மீறி, சொக்கலிங்கம் செட்டியாரால், நடந்துகொள்ள முடியாது. அவன் சொன்னதால்தான் எனக்கு. உங்கள் செட்டியார் விஷயம் தெரியும். எனக்குத் தெரிந்தது ஊராருக்கு இன்னமும் தெரியாது. நான் சொன்னாலும், ருஜுப்படுத்த ஆதாரம் இல்லை, சொரூபானந்தர், தமது கரத்திலே 'ஜோதி' என்று பச்சை குத்திக்கொண்டிருக்கிறார் என்று ஜடாதரன் சொன்னான்; தற்செயலாக அவருடைய கையைப் பார்த்தேன், 'ஜெகஜோதி' என்று பச்சை குத்தப்பட்டிருக்கிறது, அது அவருடைய வைரத்துக்குப் பெயர் என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, 'ஜோதி' என்று பச்சை குத்தப்பட்ட ஆதாரமும் எனக்குத் துணை செய்யாது.

அது கிடக்கட்டும், கருணா எங்கே இருக்கிறாள்? அவள் உன்னைக் காதலிக்கும்போது, செட்டியாரின் சம்மதத்தை ஏன் கேட்கிறாய்? கருணாவுக்குச் செட்டியார்தான் தன் தகப்பன் என்பது தெரியுமா?" என்று நான் பல கேள்விகளைக் கேட்டேன். இருதயநாதன் கருணா, யார் தெரியுமா? அதாவது அவள் எங்கள் ஊர் ஜோதிக்குப் சொரூபானந்தத்திற்கும் பிறந்தவள், ஆனால் ஊராரின் நினைப்ப என்ன தெரியுமா! இப்போது அவள், எல்லப்ப முதலியாரின் ஏ புத்ரி! எல்லப்ப முதலியார், நெடு நாட்களாகக் குழந்தை இல்லாம லிருந்தார். அவர் சொரூபானந்த ரின், மகிமையைக் கேள்விப்பட்டு பிள்ளை வரம் கோரி எங்கள் ஊரி வந்திருந்து பூஜை நடத்தினார் அந்தச் சமயத்தில்தான், ஜோதி குப் பெண் பிறந்திருந்தது. அதனை சொரூபானந்தர், 'கடவுட் பிரசா தம்' என்று சொல்லி, எல்லப்ப முதலியாருக்குத் தந்தார். கருணா இன்று. எல்லப்ப முதலியாரின் மகளாக இருக்கிறாள். என்னுடன் கல்லூரியில் படித்தாள், காதலித் தோம். எல்லப்பரையே சென்று கேட்டேன், கருணாவும் தைரிய மாகவே அவரிடம் தன் பிரியத் தைச் சொல்லிவிட்டாள், அவரோ எதற்கும் 'குருதேவரை'க் கேட

டுச் சொல்கிறேன் என்று கூறிவிட்டார். கொஞ்ச நாள் கழித்துச் சென்றபோது, "முடியாது!" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். என்ன நடந்ததென்றால், எல்லப்ப முதலியார், சொரூபானந்தரின் கடாட்சத்தால் கிடைத்த குழந்தையின் விஷயமாக, அவரிடம் நேரில் கேட்டுச் செய்வதற்கில்லை என்ற போதிலும், சொரூபானந்தருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்திருக்கும் ஜடாதரரின் சம்மதமாவது பெற்றுத்தானாக வேண்டும் என்று எண்ணினார். அவருக்குத் தெரியாது, சொரூபானந்த ஸ்வாமி என்ற வேஷமே, சொக்கலிங்கம் செட்டியின் புரட்டு என்பது. ஜடாதரர், சம்மதம் தருவதற்கு முன்பு, சொக்கலிங்கம் செட்டியாருக்கு இரகசியமாகத் தகவல் அனுப்பி விசாரித்திருக்கிறார், எனெனில், கருணாவின் பிறப்பு வளர்ப்புச் சகலமும் ஜடாதரனுக்குத் தெரியும். சொக்கலிங்கம், ஜடாதரனுக்குச் செய்தி அனுப்பி விட்டார், கருணா ட்டாயமாக இருதயநாதனை மணம் செய்துகொள்ள 'உத்தரவு' தராதே என்று. ஜடாதரர் உத்தரவு கிடைக்காததால், பெண் தர முடியாது என்று எல்லப்ப முதலியார் சொல்லிவிட்டார். என்ன செய்வேன்! ஜடாதரரின் சம்மதம் கிடைக்காததால்தான், எல்லப்பர் திருமணத்துக்குச் சம்மதிக்கவில்லை ன்ற சூக்ஷமத்தை கருணா தெரிவித்தாள். அவளுக்கும் அதுவரை ல்தான் தெரியும், சொக்கலிங் மே சொரூபானந்த ஸ்வாமியாக டகம் நடத்தி வந்தது. ஜோதி ன் கற்பழித்தது, அதன் விளைவா த் தான் பிறந்தது, எல்லப்பருக்கு ளர்ப்புப் பெண்ணானது இவை ள் கருணாவுக்குத் தெரியாது. னக்கும் அப்போது தெரியாது. டாதரனிடம் சம்மதம் பெறாத ால்தான், கருணாவை எனக்கு ணம் செய்விக்க மறுக்கிறார் ன்று தெரிந்ததும், நான் நேரே, ங்கள் ஊர் சென்றேன். ஜடாதர ரக் கண்டேன், முறையிட்டேன். வர் முதலிலே, 'உத்தரவு' டைக்கவில்லை, 'பொருத்தம் ல்லை' என்று ஏதேதோ சாக்குச் சொன்னார். நான் விடுவதாக ல்லை. பிறகு, அவருக்கு என் மோ என்மீது இரக்கம் பிறந் து. "கருணாவை நீ பெறவேண்டு மென்றால், வைர வியாபாரம் சாக்கலிங்கம் செட்டியாருடைய ம்மதத்தைப் பெற்றுவா. உனக்குக் கருணா மீதுள்ள காதலையும் அவளுடைய சம்மதத்தையும் எடுத்துக் கூறி, அவரை வேண்டிக் கொள். அவர் சம்மதித்தால், உன் கலியாணத்தை நான் முடித்து வைக்கிறேன்" என்றான் அந்தச் சன்யாசி வேடக்காரன். "கருணாவுக்கும் சொக்கலிங்கம் செட்டியாருக்கும் என்ன சம்பந்தம்? யார் வீட்டுப் பெண்ணுக்கு யாரிடம் போய்ச் சம்மதம் தரும்படியாகக் கேட்பது" என்று நான் திகைப்புடன் கேட்டேன். அப்போது தான், ஜடாதரன், பூரா விவரத்தையும் என்னிடம் சொன்னான். புரட்டின்மேல் புரட்டுச் செய்து கொண்டு பூஜா மடங்களிலே அமர்ந்துள்ள இந்தப் பொய்யர்களைக் கூண்டோடு தொலைக்க வேண்டும் என்று எனக்கு ஆத்திரம் பிறந்தது. ஆனால், என் மனமெல்லாம் கருணாமீது இருந்ததால், புரட்டர்களைப் பிறகு ஒழிப்போம், முதலிலே, சொக்கலிங்கம் செட்டியாரின் சம்மதத்தைப் பெறுவோம் என்று எண்ணி, அவரைப் பல முறை கண்டு, எனக்கு அவருடைய சூது அவ்வளவும் தெரியும் என்பதையும் கூறி, கருணாவை, எனக்கு மணம் முடித்து வைக்கும்படி கேட்டேன், எச்சரித்தேன். செட்டியார் மசிய மறுத்தார். ஜடாதரன் ஒரு முட்டாள், உன்னிடம் இரகசியத்தைக் கொட்டிவிட்டான். ஆனால் அந்த இரகசியம் உனக்குத் தெரிந்ததால் என்னை ஆட்டிப்படைக்கலாம் என்று கனவு காணாதே, அசைக்கக் கூட முடியாது! கருணாவை, உனக்குத் தர முடியாது. நீ ஒரு கிருஸ்தவன், என்ன தைரியம் உனக்கு, கருணாவைக் கலியாணம் செய்து வை என்று கேட்க" என்பதாகக் கூறி என்னை ஏசினார். பல முறை கெஞ்சினேன், சில சமயம் மிரட்டியும் பார்த்தேன். "சொக்கலிங்கமே சொரூபாநந்தன்; சொரூபானத்தருக்கும் ஜோதிக்கும் பிறந்தவளே கருணா, இவைகளெல்லாம் உண்மைதான். ஆனால் இவை உண்மை என்று எப்படி ருஜுப்படுத்துவாய்?" என்று என்னைக் கேட்டான் அந்தக் கள்ளன். "ஏன் ஜடாதரனின் சாட்சி இல்லையோ"? என்று நான் சொன்னேன், "என்னுடன் சகலத்திலும் பங்கு கொண்டவனும், என் உதவியால் இன்று 'குரு'வாகக் கோலம் கொண்டிருப்பவனுமான, ஜடாதரன் உனக்குச் சாட்சியாகவா வருவான்! பைத்தியக்காரா! வருவானா? என் கூட்டாளி, பங்காளி! அவன் எனக்கு எதிரியாவானா? ஆனால் அவன் கதி என்னவாகும்? அன்று உன்னிடம் ஏதோ சொல்லிவிட்டான் பழைய நாள் சம்பவங்களை. போதையாக இருந்திருப்பான். இப்போது போய்ச் சாட்சியாக வரவேண்டும் என்று கூப்பிட்டுப்பார்" என்றார் உங்கள் செட்டியார். ஜடாதரன், அது போலவே. நாள் போய்க் கேட்டபோது, "நான் என்ன பைத்தியக் காரனா?" என்று சொல்லி அனுப்பி விட்டான். இன்றுகடைசி முறையாகச் சொரூபானந்த வேடமிட்ட சொக்கலிங்கத்தைக் கேட்டுவிட்டேன், முடியாது என்று கூறிவிட்டான், இதுதான் என் கதை. எனக்கு என்ன உபகாரம் தேவை என்றால், எப்படியாவது' சொக்கலிங்கமே சொரூபானந்தஸ்வாமி என்பதைக் காட்டுவதற்கான ஆதாரம் தேவை. ஜடாதரன் எழுதியகடிதங்கள் ஏதேனும் கிடைக்குமானால், நமது நாட்டைக் கெடுக்கும் இந்த நயவஞ்சகர்களின் நாடகம் வெளிப்படும், மக்கள் தப்புவார்கள்." என்று கூறி, என்னை வேண்டிக்கொண்டான். நான், எப்படி எப்படியோ முயற்சி செய்து பார்த்தேன், ஒரு கடிதம் கூடக் கிடைக்கவில்லை. இருதய நாதன், கருணாவைக்கூட மறந்தான், காவி உடைக் கள்ளர்களை வெளிப்படுத்த வேண்டும் என்று துடிதுடித்தான். இன்று காலை முதல், பல வக்கீல் வீடுகளுக்கு இருவருமாகப் போனோம். அதாவது என்னை அழைத்துக்கொண்டு போனான். எந்த வக்கீலிடம் சொன்னாலும், "நான்சென்ஸ்! ஆதாரம் என்ன? ருஜு எங்கே? சாட்சி யார்?" என்று தான் கேட்டார்கள். சிலவக்கீல்கள் "பிரபல வியாபாரி அவர், அவர் மீது, ஆள் மாறாட்டக் குற்றம் சுமத்துவது, எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா, ருஜுவே இல்லாத விஷயம், எவனோ ஜடாதரன் சொன்னான் என்கிறாய், அவனே சாட்சியும் வரமாட்டான் என்கிறாய், கோர்ட்டிலே எழுந்து நின்று எந்தக் கோமாளியும் இப்படி ஒரு விசித்திரமான வழக்கு வாதாட முன் வருவானா? மான நட்ட வழக்குத் தொடருவார் செட்டியார்" என்று இருதயநாதனையே மிரட்டியும் அனுப்பினார்கள். இருதய நாதன் கூறும் வழக்கு என்ன தெரியுமோ? தெளிவாக இருக்கும்.

வைர வியாபாரம் செய்யும் சொக்கலிங்கம் செட்டி, இருபது ஆண்டுகளுக்கு முன்பு, சாமியார் வேஷம் போட்டுக் கொண்டு,

சொரூபானந்தசாமி என்று பெயரிட்டுக்கொண்டு, திருநெல்வேலி பக்கத்திலே, பாமர மக்களை எய்த்துப் பணம் பறித்து வந்தான்.

அதுசமயம், ஜோதி எனும் விதவையைக் கற்பழித்தான்; ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஜோதி இறந்து விடவே, குழந்தையைப் பக்தியால் ஏமாந்த எல்லப்பமுதலியாருக்கு 'தத்து' ஆக்கினான்.

ஆகவே சொக்கலிங்கம் செட்டியார் ஒரு புரட்டன், காமுகன், காவி வேடத்திலே உலாவிய கள்ளன், கற்பழித்தவன். அவனுடைய 'சொத்து' மதவேஷமிட்டு ஊரை ஏய்த்துப் பொருள் பறித்தன் விளைவு.

இவனுடைய புரட்டு முழுவதும் இவனுக்கு உடந்தையாக இருந்து பிரதம சீடனாகவும் இருந்து இப்போது 'குருஸ்தானம்' வகிக்கும் குடிகாரன் ஜடாதரன் என்ற சடையனுக்குத் தெரியும்.

காருண்ய மிகுந்த சர்க்கார், இந்த வழக்கை விசாரித்து, ஜடாதரனை உண்மையைக் கூறும்படி செய்து காவி பூண்டு உலவும் கள்ளரின் புரட்டை உலகு அறியச் செய்து, ஏழை மக்கள் இவ்விதமான எத்தர்களுக்கு இரையாகாதிருக்கும்படி பாதுகாத்தருள வேண்டும்.

இதுதான் இருதயநாதன் தொடுக்க விரும்பும் வழக்கு. இதை நடத்திக் கொடுக்கும்படியாகத் தான் இன்று பகல் பொழுது முழுவதும், எத்தனையோ வக்கீல் வீடுகள் ஏறி இறங்கினோம். அவ்வளவு பேரும், சிரிக்கிறார்கள்; ருஜூ, சாட்சி, ஆதாரம், எடு என்று கேட்கிறார்கள்! ஒரு வக்கீல் சபித்தே விட்டார்.

"அடே மஹா பாபி! சொரூபானந்தரையா இப்படித் தூஷிக்கிறாய்? நான் அவரைத் தரிசித்து இருக்கிறேன். உனக்கு என்னடா தெரியும் ஞானிகளின் குணம்" என்று இடித்துரைத்தார். புரட்டு நடத்திய சொக்கலிங்கம் செட்டியும் ஒப்புக்கொள்கிறான், உடந்தையாக இருந்த சடையனும் ஒப்புக்கொள்கிறான், இருதயநாதனிடம் பேசும்போது! ஊர் ஒப்புக்கொள்ளாதே! கோர்ட்டிலே கேஸ் நிற்காதே! சொரூபானந்த ஸ்வாமிகள், ஜோதியில் கலந்ததற்கு ஆதாரம் இருக்கிறது! அந்தச் சமயத்திலே, பிரசங்கம் செய்தவர்களிலே, இந்த ஊர் நீதிபதியும் ஒருவராம்! இந்த நிலையிலே, இருதயநாதன் எப்படி வழக்குத் தொடுக்க முடியும்? வக்கீலுக்காகத் தேடித் தேடி அலைந்து, ஆத்திரம் அதிகமாகிவிட்டது இருதயநாதனுக்கு. நேரே, என்னை அழைத்துக் கொண்டு, கருணை வீட்டுக்குப் போனான். அங்கே, எல்லப்ப முதலியார் எதிரிலேயே, முழுக் கதையையும் கொட்டினான். "இப்படிப்பட்ட பைத்யக்காரனைக் கலியாணம் செய்து கொள்கிறேன் என்று சொன்னாயே, பாரம்மா, கருணை! பார் இந்தப் பித்தனை" என்று எல்லப்ப முதலியார் கூறினார். கோபம் தலைக்கேறிவிட்டது இருதயநாதனுக்கு. எல்லப்ப முதலியாரைத் தாக்கினான். அவ்வளவுதான், அவருடைய வேலையாட்கள் கூடி, அடி அடி என்று அடித்தனர், நான் ஓடினேன், அதனால் தப்பினேன். பலமான அடிபட்டுக்கொண்டு, இரத்தம் ஒழுக ஒழுக இருதயநாதன் எல்லப்ப முதலியாரின் பங்களாவை விட்டு வெளியே வந்தான். நான் சென்று, அவனைத் தாங்கியபடி, அழைத்து வந்தேன். வருகிறவழியிலெல்லாம்கூட, "ஒரு நல்ல வக்கீல் மட்டும் கிடைத்து விட்டால், இந்தச் சொக்கலிங்கத்தின் வண்டவாளத்தை ஊரறியச் செய்து, பத்து வருஷம் ஜெயிலுக்கு அனுப்பிவைப்பேன்" என்று கூறிக் கொண்டேவந்தான். கம்பவுண்டர் சார்! இதுவே பரிதாபத்துக்குரிய என் நண்பனின் கதை" என்று எம்பெருமான் கூறிமுடித்தார்.

திகைத்துப் போனான் கம்பவுண்டர்.

"ஏன் சார்! உலகிலே இப்படியும் புரட்டுகள் நடக்கின்றனவா?" என்று யோசிக்கிறீர், என்று கேட்டார் எம்பெருமான்.

"இல்லை, சார், இல்லை! காவி போட்ட கள்ளர்கள் பலபேர் இருக்கிறார்கள். ஒவ்வொருவனுடைய கொடிவழி பட்டியையும் பார்த்தால் இப்படி ஏதாவது ஒரு புரட்டாகத்தான் இருக்கும். ஏமாறுகிற ஆசாமிகள் இருக்கிறவரையிலே, ஏமாற்றுகிறவர்கள் இருந்துதான் தீருவார்கள். நான் அதற்காக அல்ல யோசித்தது. இருதயநாதன் கூறுவது உண்மையாகத்தான் இருக்கிறது. அவனுக்குச் சொக்கலிங்கத்திடமோ, ஜடையனிடமோ என்ன பகை? பாவம்! ஆனால் இருதயநாதன் கூறும் உண்மையை, கோர்ட் ஏற்றுக்கொள்ளாதே. வழக்குக்கு ஆதாரமே இல்லை, பொய்யாக சோடிக்கப்பட்ட கேஸ் என்று தள்ளிவிடுவதோடு, இருதயநாதன்மீது மான நஷ்ட வழக்குக்கூடத் தொடுத்துவிடுவார்களே என்பதை எண்ணித் தான் திகைத்தேன்" என்றான் கம்பவுண்டர்.

ஃ ஃ ஃ

பொழுது விடிந்தது, இருதயநாதன், கண்விழித்தான், களைப்புடன் காணப்பட்டான். டாக்டர், "கை பார்த்தார்" மருந்து கொடுத்தார். ஒரு வாரத்தில் பழையபடி உலவும் நிலை பெற்றான். ஆனால், பழைய நினைப்பு யாவும் அழிந்துவிட்டது. கருணை! எல்லப்பமுதலி! சொக்கலிங்கம்! சொரூபானந்தன்! சடையன்! எல்லாம் மனதிலிருந்தே மறைந்துபோய் விட்டது. எம்பெருமானைக் கூட மறந்துவிட்டான். பழைய உருவம், உள்ளம் பிரத்தியேகமான மாறுதலை அடைந்துவிட்டது. எம்பெருமானைச் சென்று, எவ்வளவோ முயன்று, பழைய நினைவுகளைக் கவனப்படுத்திய போதும், இருதயநாதனால் எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை, கண்களில் நீர் ததும்பிற்று எம்பெருமானுக்கு. மண்டையிலே பட்ட பலமான அடியினால், ஏற்பட்ட அதிர்ச்சியிலே, இருதயநாதனுக்கு மூளை கெட்டுவிட்டது என்று டாக்டர் கூறிவிட்டார். பித்தம் பிடித்தவனென்று, வேறு பாட்டு ஆட்டம், சேட்டை, எதினாலும் தெரியவில்லை. இருதயநாதன், தன் எதிரிலே, யாரைக் கண்டாலும், 'வக்கீலா, சார்! நீங்கள்" என்று கேட்பான். வேறு ஒருபேச்சும் பேசுவதில்லை! திக்கற்ற இருதயநாதனுக்கு எம்பெருமான்தான் உதவி செய்துகொண்டிருந்தான், சாப்பிடுவான், உலவப் போவான், உலவிவிட்டு எம்பெருமான் வீடு வந்ததும், "இருதயம்! எங்கே அப்பா போயிருந்தே?" என்று எம்பெருமான் கேட்பான். "வக்கீல் வீட்டுக்கு" என்று பதில் கூறுவான் இருதயநாதன்.

யார் வருவார்கள், அவனுக்கு வக்கீல் வேலை செய்ய!!

[கதை கற்பனையே. பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல]

'திராவிட நாடு' 3—3—46

★

# ‘துக்கதினம்’ - என்பது அரசியல் ஸ்டண்டே

இன்று முதல் மதுவிலக்கு என்ற போலிநாடகம் ஒழிகிறது. சட்டமும், ஒழுங்கும், பங்கப்படுவதும் லஞ்சமும்; கள்ளச் சாராய உற்பத்தியும், கண்டதையும் குடித்து அற்பாயுளில் மாளும் கொடுமைகளும் மாய்ந்தொழியும் நிலை ஏற்படுவது குறித்துப் பொது நலத்தில் உண்மையான அக்கறையும் ஆர்வமும் கவலையும் கொண்ட அனைவரும் இதனை வரவேற்பார்கள்.

அரசியலில் ஏதும் வாய்ப்புக் கிடைக்காமல், மூக்கறுபட்டு மூலையில் தள்ளப்பட்டோர் இது குறித்து முகாரி பாடி, முதலைக் கண்ணீர் சிந்தக்கூடும். அனைத்து இந்தியாவிலும் உள்ள இதர மாநிலங்களில், ஏன் டில்லித் தலைநகரம் உட்பட பல்வேறு மாநிலங்களில் மதுவிலக்கு இல்லையே, அங்கே உங்கள் கண்டன ஆர்ப்பாட்டங்களும், உண்ணாவிரத ஒத்திகைகளும் ஏன் தலை தூக்கவில்லை என்றால். அதற்குச் சரியான வகையில் பதில் அளிக்க மாட்டார்கள்! காரணம் அவர்களால் பதில் அளிக்க முடியாது.

அரசியலில் இனித் தலை தூக்க இயலாதவர் இப்படி ஒரு ‘மூர் மார்க்கெட் மோடி மஸ்தான்’ வேலை செய்து பார்க்கிறார்கள்! அசல் கோயபெல்ஸ் பிரசாரத்திற்கு உச்ச கட்டத்திற்குச் செல்வதுபோல், “கல்வித் சாலை திறந்தார் காமராஜர்; கள்ளுக்கடை திறந்தார் கருணாநிதி” என்று தங்கள் ஏடுகளில் தம்பட்டம் அடித்துள்ளார்கள்.

காமராஜர் ஆட்சியில் ஏற்படுத்திய கல்விச் சாலைகளை கலைஞர் ஆட்சியில் ஏதோ அவர் மூடிவிட்டதுபோல் ஒரு பாசாங்கு பிரசாரம் செய்கின்றனர்.

கல்விக்கு முன்பு செலவழித்த தொகை 44 கோடி; இன்று கலைஞர் ஆட்சியில் செலவாகும் தொகை 82 கோடி ரூபாய்! அதுமாதிரி இரண்டு மடங்கு தொகை!! அவர்கள் காலத்தில் எஸ். எஸ். எல். சி. வரை இலவசக் கல்வி. கலைஞர் ஆட்சியில் பி.யு.சி. வரை இலவசக் கல்வி!

முன்பைவிட கல்லூரிகள், பள்ளிகள் அனைத்தும் ஏராளமாகப் புதிது புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றாலும் இப்படிப் பேசுவது என்றால். அது அசல் விஷமப் பிரசாரம் அல்லாமல் வேறு என்ன?

மதுவிலக்கு என்ற வறட்டுக் கொள்கையால் தமிழ்நாட்டில் பட்டி, தொட்டி, நாடு, நகரம் முழுவதும் கள்ளச் சாராயக்கடைகளும், உற்பத்திச்சாலைகளும், மாபெரும் குடிசைத் தொழில்களாகவே உண்டாகிவிட்டன! அத்தனைக் கள்ளச் சாராய தொழிலதிபர்களும் லஞ்சம் மாமூல் என்பதைச் சரளமாக்கி, காவல் துறையின் ஒழுக்கத்தையே நாசமாக்கிவிட்டனர். கல்விச் சாலைகளை மட்டும் காங்கிரஸ் ஆட்சி திறக்கவில்லை.

கள்ளச் சாராயக் கடைகளையும் திறந்தது. அதன் மதுவிலக்குக் கொள்கையினால்!

பர்மிட் குடியர்கள் என்ற பணக்கார குடிகாரர்கள், வார்னிஷ் குடியர்கள் என்ற குடிசைவாழ் குடிகாரர்கள் என்ற இரு பெரும் பேதப்பெரு நிலையை உண்டாக்கி அற்பாயுளில் குடல் வெந்து அனாதைகளாக பல ஏழை, எளிய மக்களைக் கொன்று தீர்த்தனர். மதுவிலக்கு ஒழிப்பால் அது மாறி விடுகிறது!

கள்ளச் சாராய உற்பத்திக்காரரும், லஞ்சம் மாமூல் வாங்கிப் பழகிய கைகளைச் சும்மா வைத்திருக்க முடியவில்லை என்ற சிலரும்தான் இதுபற்றி பதட்டமடைய வேண்டியவர்கள்! காங்கிரஸ்காரர்களும், பார்ப்பனர்களும் ஏன் துடிக்கிறார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை!

தாய்மார்களெல்லாம் கண்ணீர் விடுவார்களாம்! பட்டைச்சாராயம் என்ற பெயரால் கண்ட கருமத்தைக் குடித்து வீட்டில் பானை பானையாக காய்ச்சி குழந்தை முதல் பெண்கள் வரை அத்தனை பேருக்கும் ஆளுக்குச் கொஞ்சம் கொஞ்சம் ஊற்றிய நிலை மாறி, குடிக்கும் கணவனோ, உறவினரோ கடைக்குப்போய் ஒழுங்கானதைக் குடித்துவிட்டுத் திரும்புவதை உண்மை அறிவுள்ள தாய்மார்கள் பழைய நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்து வரவேற்கவே செய்வர்!

குடித்துவிட்டுப் பொதுத் தெருவில் ஆட்டம் போடவோ நேரம் காலமின்றி மது விற்பனை வசதியோ மற்றும் பல சமூகவிரோதச் செயலோ நடைபெறா வண்ணம் தகுந்த வகையில் சட்டத்தில் பாதுகாக்க வழிவகை செய்யப்பட்டுள்ள நிலையில் கலாட்டா பெருகும். அது இது என்றெல்லாம் கூச்சல் கிளப்புவது, வேண்டுமென்றே கிளப்பப்படும் விஷமத்தனத்தின் அடிப்படையிலேயே யாகும்!

பக்கத்து மாநிலமான பாண்டிச்சேரியில் சென்று, ‘கள்ளுக்கடைகளை மூடமாட்டோம்’ என்று பேசி, ஓட்டு வாங்க முயற்சித்த உத்தமர்கள், இன்று மதுவிலக்கு என்ற சவத்தை அடக்கம் செய்யும்போது, ஓநாய் அழுகை அழுகின்றனர்!

உயிர் போன பின்னர் எவ்வளவு வாசனை திரவியங்களைப் போட்டுப் பாதுகாத்தாலும் சவம் சவந்தானே? அதைக்கட்டி மாரடிப்பது அரசியலுக்குத் தேவையானதாக இருக்கலாம்; அறிவியலுக்கு முற்றிலும் முரணே ஆகும்!

எனவே, மக்களை உசுப்பலாம்; தாய்மார்களை ஏமாற்றலாம் என்று சிண்டிகேடர்களும் பார்ப்பனர்களும் நினைத்தால் அவர்கள் மீண்டும் ஒரு இமாலயத் தோல்வியைச் சந்திக்கப் போகிறார்கள் என்பது உறுதி!

துக்க தினத்திற்குப் பதில் சிண்டிகேடர்கள் வழக்கம்போல், ‘தூக்கதினம்’ கொண்டாடினால் அவர்களுக்குள்ள கொஞ்சநஞ்ச மரியாதையாவது மிஞ்சும்! இல்லையேல் அடியோடு விலாசமிழந்து வில் ஒடிந்த கட்சியாக அது ஆகிவிடும். எச்சரிக்கை!

—(விடுதலை 30—8—71-ம் நாள் தலையங்கம்.)

[illegible]ரியர் வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3 [illegible] வெளியிடப்படுகிறது